# கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்

**கோவை- 21.**

Enable | Enlighten | Enrich
KARPAGAM
ACADEMY OF HIGHER EDUCATION
(Deemed to be University)
(Established Under Section 3 of UGC Act, 1956 )

# கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்

# தமிழ்த்துறை

(2019-2020)

**பகுதி – I, தமிழ்ப் பாடத்திட்டம்**

**முதற்பருவம்:19LAU101**

(முதலாமாண்டு இளநிலை **கலையியல்**
பட்ட வகுப்புகளுக்குரியது)

## (For I-UG Arts Degree Classes)

# கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்
## தமிழ்த்துறை
## பகுதி - I தமிழ்ப் பாடத்திட்டம் (2019 - 2020)
### (இளநிலை கலையியல் பட்ட வகுப்புகளுக்குரியது)
### (For I-UG Arts Degree Classes)

---

**பாடத்திட்டப் பொதுநோக்கம்**

- கற்றல் வழி சிந்தனைத் திறனையும், கருத்து வெளிப்பாட்டுத் திறனையும், ஆய்வுநோக்கையும் மேம்படுத்துதல்.
- இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வின் நுட்பமான பகுதிகளை உணர்த்துதல்.
- மனித மனத்தினைப் பக்குவப்படுத்துதலில் இலக்கியம் தரும் பங்கினை உணர்த்துதல்.
- வளர்ந்து வரும் சமூகத்தில் அறஉணர்வு , பண்பாடு போன்றவை குறித்து அறிவூட்டல்.
- அரசுத் தேர்வுகளுக்கு மாணவர்களை ஆயத்தமாக்குதல்.

**பாடத்திட்டப் பயன் விளைவு**

- இந்திய குடியுரிமைப் பணி முதலான போட்டித் தேர்வுகளில், விருப்பப் பாடமாக இடம்பெறுகின்ற, 'தமிழ் இலக்கிய வரலாறு' குறித்த முழுமையான அறிமுகம் பெற்றிருத்தல்.
- கல்வெட்டியல், ஓலைச்சுவடியியல் மற்றும் தொல்லியல் சார்ந்த ஆவணத் தேடலுக்குரிய ஆய்வுமனப்பான்மையுடன், இலக்கியங்களை அணுகுதல்.
- தமிழின் வளர்ச்சித் துறையாகிய, 'அறிவியல் தமிழ்'; 'இணைய தமிழ்' குறித்த பன்நோக்கு அணுகுமுறையிலான ஆய்வுச் சிந்தனை வளர்ச்சி பெற்றிருத்தல்.
- வேலைவாய்ப்புக்குரிய சுயதிறன் மேம்பாட்டுடன், படைப்பாக்கத்திறன் மேம்பாடும் பெற்றிருத்தல் .
- சமுதாய மற்றும் வாழ்வியல் மதிப்புகளைப் பேணுவதற்குக் கருவியாக இலக்கியங்களை நாடுகின்ற மனப்பான்மை வளர்ச்சி.

### தாள்கள் வரிசையும் தேர்வுச் செயல்திட்டமும்
### பகுதி-I தமிழ்

**இளநிலைப் பட்டவகுப்புகள்**

| பருவம் | தாள் | கற்பிக்கும் நேரம்/வாரம் | தேர்வு மணிகள் | மதிப்பெண் அக/எழுத்து | மொத்தம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| இரண்டு | I | 6 | 3 | 40 / 60 | 100 | 6 |

# கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்

# தமிழ்த்துறை

## பகுதி - I தமிழ்ப் பாடத்திட்டம் (2019-2020)

**பகுதி – I, தமிழ்** **முதற்பருவம்** **19LAU101**

**முதல் தாள்** 6-H,6-C

**(இளநிலை கலையியல் பட்ட வகுப்புகளுக்குரியது)**
**(For I-UG Arts Degree Classes)**

---

**அலகு – I : இக்கால இலக்கியம்: (20 மணிநேரம்)**

1. மகாகவி பாரதியார் – யோக சித்தி-தேடிச்சோறு .
2. பாரதிதாசன் – தமிழின் இனிமை.
3. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை – வாழ்க்கைத் தத்துவங்கள்.
4. கண்ணதாசன் – சுயதரிசனம்.
5. கவிக்கோ. அப்துல் ரகுமான் – மண்.
6. மு.மேத்தா – மரங்கள்
7. கவிஞர் வைதீஸ்வரன் – விரல் மீட்டிய மழை .
8. ஈரோடு தமிழன்பன் – இன்னொரு சுதந்திரம் .
9. நர்மதா – பெண்ணே உனக்காக .
10. பெரு.மதியழகன் – புதுமைக்குயில் .

**அலகு – II : அற இலக்கியம்: (15 மணிநேரம்)**

1. **திருவள்ளுவர்- திருக்குறள் –** பண்புடைமை
2. **ஔவையார் – கொன்றை வேந்தன் (1- 50 பாடல்கள்)**
   அன்னையும் பிதாவும் – புலையும் கொலையும் களவும் தவிர்
3. **நாலடியார் – (5 பாடல்கள்)**
   குஞ்சிஅழகும், இம்மை பயக்குமால், களர்நிலத்து, வைப்புழிக்கோட்படா, கல்விகரை
4. **முன்றுறையரையனார் – பழமொழி நானூறு 5 பாடல்கள்**
   உணற்கு இனிய, பரந்த திறலாரை, நெடியது காண்கிலாய், இனி யாரும், உரைசான்ற

## அலகு – III : சிற்றிலக்கியம்: (15 மணிநேரம்)

1. **முக்கூடற் பள்ளு**- 2 பாடல்கள் - சித்திரக் காலிவாலான் (நெல்வகைகள்)
   குற்றாலத் திரிகூட மால்வரை (மீன் வகைகள்)
2. **நந்தி கலம்பகம்**- 5 பாடல்கள்- என்னையே புகழ்ந்தேன், பதிதொறு
   புயல்பொழி, இந்தப்புவியில், அடிவிளக்கும் துகில், வானுறுமதியை
3. **மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது** –தமிழின் சிறப்பு
   பாடியருள பத்துப்பாட்டும் - விளம்பக்கேள்.
4. **மதுரை மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்** –3 பாடல்கள்-
   அம்புலிப் பருவம் - கண்டுபடு குதலை
   தாலப் பருவம் – தென்னன்
   முத்தப் பருவம் – உருகி உருகி
5. **தமிழலங்காரம்** –10 பாடல்கள்
   1. கடல் நீரில் கல் மிதக்கும், 2. வண்டமிழ் ஆற்றுதி, 3. கோளத்தை முட்டி
   4. எக்காலம் என்று, 5. கடவூர் மயானத்தொர், 6. தேவாதி தேவன், 7. விண்மாரி,
   8. தேவர் முனிவர், 9. விண்மாரி, 10. அத்தனை பொத்து.

## அலகு – IV : கட்டுரை: (10 மணிநேரம்)

1. தமிழிசை இயக்கம் – பேரா. க. வெள்ளைவாரணர்
2. தனிப்பாடல்கள் – பேரா. வ. சுப. மாணிக்கனார்
3. கலைச்சிறப்பு – முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்
4. காளத்திவேடனும் கங்கைவேடனும் – சொல்லின்செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை
5. ஏட்டில் இல்லாத இலக்கியம் – ஔவை துரைசாமி

## அலகு – V : மொழிப்பயிற்சி: (12 மணிநேரம்)

1. பொருத்தமான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துதல்
2. செய்யுள் பொருளுணர் திறன்
3. மொழிபெயர்ப்புப் பயிற்சிகள்
4. கடிதங்கள் மற்றும் விண்ணப்பங்கள் எழுதுதல்

**பாட நூல்: கற்பகச்சோலை – தமிழ் ஏடு.**

கற்பகம் உயர்கல்வி கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.

# KARPAGAM ACADEMY OF HIGHER EDUCATION

*(Deemed to be University Established Under Section 3 of UGC Act 1956)*

**Coimbatore – 641 021.**

## LECTURE PLAN DEPARTMENT OF TAMIL

STAFF NAME: Dr.R.Suresh Dr.R.Veerapathiran Mrs.S.Kopperundevi
SUBJECT NAME: TAMIL SUB.CODE:19LAU101
SEMESTER: I CLASS: I B.COM

| Month | Topics to be Covered | Lecture Duration Period | Support Material/Page Nos |
|---|---|---|---|
| ஜீலை 2019 | பாடத்திட்ட அறிமுகமும், பயன்பாட்டு நோக்கும் | 01 | |
| | தமிழிலக்கிய வரிசையும் வடிவங்களும் அறிமுகம் | 02 | |
| | மகாகவி பாரதியார் - யோகசித்தி | 02 | T1:09 |
| | புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் – தமிழின் இனிமை | 02 | W1:01 |
| | கவிக்கோ அப்துல்ரகுமான் - மண் | 01 | T1:18 |
| | கவிஞர் நர்மதா – பெண்ணே உனக்காக | 01 | T1:27 |
| | திருக்குறள் - பண்புடைமை | 02 | T1:33 |
| | முக்கூடற் பள்ளு – நெல்லும் மீனும் | 02 | T1:45 |
| | மதுரை சொக்கநாதர் தமிழ்விடுதூது, தமிழின் சிறப்பு | 03 | T1:49 |
| | தமிழிசை இயக்கம் - உரைநடை | 02 | T1:59 |
| | கடிதப்பயிற்சி - 2 | 02 | W1:01 |
| | மொழிபெயர்ப்புப் பயிற்சி - 2 | 02 | T1:111 |
| | திருப்புதல் | 02 | |
| | **மொத்த மணிநேரம்** | **24** | |
| ஆகஸ்ட் 2019 | கவிமணி – வாழ்க்கைத் தத்துவங்கள் | 02 | T1:15 |
| | கவிஞர் எஸ். வைத்தீஸ்வரன் – விரல் மீட்டிய மழை | 02 | T1:22 |
| | ஔவையார் – கொன்றை வேந்தன் | 02 | T1:35 |
| | நாலடியார் - கல்வி | 02 | W1:2 |
| | நந்திக் கலம்பகம் – 5 பாடல்கள் | 02 | T1:47 |
| | உரைநடை - கலைச்சிறப்பு | 02 | T1:75 |
| | உரைநடை - தனிப்பாடல்கள் | 03 | T1:67 |
| | உரைநடை – கங்கைவேடனும் காளத்தி வேடனும் | 03 | T1:88 |

| | | | |
|---|---|---|---|
| | கடிதப் பயிற்சி | 02 | W1:01 |
| | திருப்புதல் | 03 | |
| | **மொத்த மணிநேரம்** | **23** | |
| **செப்டம்பர் 2019** | கவிஞர் மு. மேத்தா - மரங்கள் | 01 | T1:20 |
| | கவிஞர் பெரு. மதியழகன் – புதுமைக் குயில் | 01 | T1:29 |
| | கவிஞர் கண்ணதாசன் - சுயதரிசனம் | 02 | T1:16 |
| | பழமொழி நானூறு | 01 | T1:39 |
| | பிள்ளைத் தமிழ் | 02 | T1:51 |
| | நீதிநெறி விளக்கம் | 01 | T1:41 |
| | ஏட்டில் இல்லாத இலக்கியம் | 02 | T1:99 |
| | தமிழலங்காரம் | 02 | T1:54 |
| | மொழிப்பயிற்சி | 05 | |
| | திருப்புதல் | 04 | |
| | **மொத்த மணிநேரம்** | **21** | |
| **அக்டோபர் 2019** | திருப்புதல் | 04 | |
| | **மொத்த மணிநேரம்** | **04** | |
| | **மொத்த மணிநேரங்கள்** | **72** | |

**TEXT BOOK**

**பாட நூல்: கற்பகச்சோலை – தமிழ் ஏடு.**

கற்பகம் உயர்கல்வி கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.

**WEBSITES**

**W1**: www.tvulibrary.org.in

**W2:** http://www.maduraitamilproject.com

## UNIT-I

## SYLLABUS

**இக்கால இலக்கியம் – கல்வி, இன்றைய நிலை, மனிதநேயம், சூழலியல், பெண்ணியம் வாழ்க்கை, இயற்கை**

1. மகாகவி பாரதியார் – யோக சித்தி-தேடிச்சோறு .
2. பாரதிதாசன் – தமிழின் இனிமை.
3. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை – வாழ்க்கைத் தத்துவங்கள்.
4. கண்ணதாசன் – சுயதரிசனம்.
5. கவிக்கோ. அப்துல் ரகுமான் – மண்.
6. மு.மேத்தா – மரங்கள்
7. கவிஞர் வைதீஸ்வரன் – விரல் மீட்டிய மழை .
8. ஈரோடு தமிழன்பன் – இன்னொரு சுதந்திரம் .
9. நர்மதா – பெண்ணே உனக்காக .
10. பெரு.மதியழகன் – புதுமைக்குயில் .

KAHE

## 1. யோகசித்தி – பாரதியார்

**முன்னுரை**

பாட்டுப்புலவன் பாரதி தன்னுடைய கவித்திறத்தால் இவ்வையத்தை பாலித்திட நினைத்தவர். தன்னுடைய கவிதைகளின் மையமாக மக்களையும், நாட்டையும் மட்டுமே கொண்டிருந்வர். யோகசித்தி என்ற அவரது பாடப்பகுதி கவிதயில் எதிர் காலத்தில் நாடு பெறவேண்டிய நலன்களையும், சிறப்புக்களையும் அருளச் சொல்லி தேவியை வேண்டி நிற்பதோடு அவ்வளம் மிகுந்து நாட்டிற்குத் தாம் தலைவனாக இருக்கவேண்டும் என்ற தன்னுடைய விருப்பத்தையும் பதிவு செய்கிறார் எனலாம்.

**இயல்பான மனிதனின் செயல்**

நாள்தோறும் உணவினை விரும்பி உண்டு, பல்வேறு கதைகள் பேசி அதன்மூலம் மனவேதனை உற்று, துன்பத்தில் வாடி வாழ்கின்றனர். மேலும் பிறரையும் வேதனையுறச் செய்து தலைமுடி வெளுத்துப் போகும் மூத்த வயதில் கொடியவனாகிய எமனுக்கு இரையாகின்றனர். இத்தயைக அற்ப மனிதரைப் போல நான் வீழ்வேன் என்று எண்ணினாயோ என வினவுகிறார்.

**தேவியிடம் வேண்டல்**

தேவியிடம் பாரதியார், “ உன்னிடம் சில வரங்கள் கேட்பேன்” என வேண்டுகிறார். நாளையும் நேற்றும் உண்மையல்ல என்பதை உணர்ந்த பாரதியார், அவ்வரங்களை இன்றே வேண்டுமென வேண்டுகிறார். அவர், முந்தைய பிறவிகளின் வினைகள் யாவும் அழிந்திட வேண்டும் என்றும், இன்று முதல் புதிய உயிராகத் தம்மைப் படைத்திட வேண்டும் என்றும் கேட்கிறார். மேலும் எவ்விதக் கவலையும் இன்றி இருக்கச் செய்து, அறிவினைத் தூயதாக்கி என்றும் மகிழ்ச்சியுறச் செய்ய வேண்டும் என்கிறார்.

**உடல் வலிமை வேண்டும்**

பாரதி, தமக்குச் செம்மையான உடல்நலம் வேண்டிப் பாடுகையில், தன் தோள்களை மிகுந்த ஊறுதிபடச் செய்து, உடலின் சோர்வையும், நோய்களையும் போக்க வேண்டுகிறார். கூரிய அரிவாளால் தன் உடலைப் பிளக்கும் போதும் வலிமை குறையாத உறுதியைக் கேட்கிறார். ஒளிச்சுடர் போன்ற புத்தம் புதிய நாள் தோன்றியவுடன் மலரும் மலர் போல, ஒளிபொருந்திய முகம் தரவேண்டும் அத்தோடு வீடுபேறடைய மிகப் பெரும் தடையாக விளங்கும் காமமாகிய மன்மதனை வெல்லும் திறல் வேண்டும் என்கிறார்.

**தொழில் வளம் வேண்டல்**

நினைக்கின்ற காரியங்கள் யாவும் வெற்றிபெற வேண்டும் என்கிறார். மேலும் தொழில் செய்யத் தேவையான பெரும்பணம் வேண்டும் என்கிறார். ஈமலும் தொழில் செய்யத்தேவையான பெரும் பணம் வேண்டும் என்கிறார். அதில் பல்வேறு மக்களும் துணைபுரியவும், வேலையோடு அலுப்பின்றி இருக்க, நல்ல தாளம் பொருந்திய பாட்டுக்கள் மனதல் நிறைய வேண்டும் என்றும், மேலும் அப்பாடல்களால் கோடிக்கணக்கான பல இன்பங்கள் எய்திட, தானும் பாடும் திறன் அடைய வேண்டும் என்கிறார்

**சித்திகள் வேண்டல்**

பாரதியார், கருங்கல்லை வைரமாக மாற்றுதல், செம்பைப் பொன்னாக்குதல், சாதாரணப் புல்லை நெல்லாக்குதல், அற்பமான பன்றியை வீரமிக்க சிங்கமாக மாற்றுதல், சுவையற்ற மண்ணை தித்திக்கும் வெல்லமாக்கல் ஆகிய அபூர்வ சித்துகளினால் அனைவரையும் வியப்புறச் செய்ய வேண்டும். இந்த நாட்டின் துன்பத்தைத் தீர்க்கும் திறமும், கல்வி, வெற்றியைத் தேடித்தரும் அறிவுடன் இயைந்த வீரமும் வேண்டுகிறார்.

**தீயவையைத் தாங்கும் திறன் வேண்டுதல்**

குவிந்து கிடக்கும் செல்வங்கள், அறிவுத் திறம் சார்ந்த பல்வகைத் தொழில்கள் என அனைத்தும் இந்நாட்டில் சிறந்து விளங்க, மற்றவர் இந்நாட்டின் புகழ் பாட, தீயதைச் சாடும் திறனைத் தரவேண்டும் என்கிறார்.மேலும் என்னுள் ஏற்பட்டிருக்கும் அறியாமையை விலக்கி எவற்றையும் எதிர்க் கொள்ளும் பலனைத் தரவேண்டும், இவையனைத்தும் அரிதினும் அரிதெனினும் , தாயாகிய உனக்கு இவை மிகவும் எளிதன்றோ என்கிறார்.

**சக்தி தர வேண்டுதல்**

அறிவினை அழிக்கும் பொய்யாகிய இருள் தன்னைவிட்டு முழுமையாக நீங்க வேண்டும் என்றும், அற்ப பயம் தம்மைவிட்டு விலக வேண்டும் என்றும் வரம் கேட்கிறார். மேலும் இதை மெல்லச் சொல்வதற்கு என்ன உள்ளது என்று வினவி, முந்தைய காலத்தில் பார்த்தனாகிய அர்ச்சுனனுக்கும், கண்ணனுக்கும் அருள் செய்தது போலே தம்மையும் அரவணைத்து அருளல் வேண்டும் என்கிறார்.

**முடிவுரை**

மேற்கூறப்பட்டுள்ள அனைத்தையும் உன்னிடம் வேண்டுகிறேன். உன்னால் இயலாதது எதுவுமில்லை, உன்னைக் கோடிமுறை தொழுதேன். இனி என்னை உலகின் தலைமகனாக்கி அருள்வாயாக! நின் அருள் வாழி! நீ வாழி! என்கிறார். இவ்வாறெல்லாம் பராசக்தியைத் தொழுவதன் மூலம் தன்னுடைய நாடு நலம் பெற்றுத் திகழ பாரதி வேண்டுகிறார்.

## 2. தமிழின் இனிமை

**முன்னுரை:** தமிழுணர்வு மிக்க கவிஞர் பாரதிதாசன். தமிழின் இனிமையைத் தமிழர்களுக்கு உணர்த்தும் விதமாக இனிமையான பொருள்களை இங்குப் பட்டியலிட்டுத் தமிழின் இனிமை என்ற தலைப்பில் இனிமை சொட்டச் சொட்டப் பாடுகிறார்.

**பலாவும் கரும்பும் :** கனி என்பதே சுவயுடையது. அதிலும் அந்தக் கனியில் சுளைகளாக இனிமை ஏறி நிற்கும் போது அதுவும் மேலும் சுவை நிரம்பியதாகிறது. கரும்பே இனிமை அதிலும் முற்றிய கரும்பின் சாறு ஏறி நிற்கும் போது மேலும் இனிமையாகிறது.



KAHE

**மலரும் பாகும்** : குளிர்ந்த மலரைப் பார்ப்பதே அழகு. அந்த அழகின்மேல் நிரம்பி நிற்கும் தேன் இன்னும் சுவையை மிகுவிக்கிறது. பாகினைக் காய்ச்சும்போது இன்னும் இனிமைச் சுவை ஏறி நிற்கிறது.

**பாலும் நீரும்** : சிறந்த பசு பொழிகின்ற பால் இனியது. தென்னை மரம் நல்கும் குளிர்ந்த இள நீர் இனியது. என்னுயிர் இவையெல்லாம்.

**‘ இனியன என்பேன் எனினும் - தமிழை**

**என்னுயிர் என்பேன் கண்டீர்!**’ என்று இனிமைக்கெல்லாம் உயர்வான உயிர் என்று முடிக்கின்றார் கவிஞர்.

இங்கே கனி என்பதைப் பலாப்பழத்தையுத் கழை என்பது கரும்பையும் குறிக்கின்றன. இவற்றின் இன்பமெல்லாம் உடலுக்கு ஆனால் அந்த உடலில் உள்ள உயிரோ தமிழுக்கு என்று கணக்கு வாய்ப்பாடு தருகிறார் கவிஞர்.

**பொழிலும் புனலும்** : புனலும் பூம்பொழிலில் வண்டுகளின் ஒலியும் ஓடையில் செல்லுகின்ற நீரின் துள்ளல் ஓசையும் நான் விரும்புவன.

**குழலும் வீணையும்** : புல்லாங்குழலில் வெளிப்படும் இசையும் வீணை கொட்டுகின்ற அமுதம் போன்ற பண்ணும் நான் விரும்புவன.

**குழவிகளும் பெண்களும்** : குழந்தைகளின் மழலைப் பேச்சும் பெண்கள் கொஞ்சிடும் இதழ்களின் வாய்ப்பும் எனக்கு மிக விருப்பமானவை.

**உடலுயிர்** : இவற்றையெல்லாம் நான் விழைந்தாலும் ‘தமிழும் - நானும் மெய்யாய் உடலுயிர் கண்டீர் ! என்று தமிழின் இனிமையின் உயர்வை உறுதி செய்கிறார் பாரதிதாசன்.

**உடன்பிறப்பும் உறவும்** : உடன் பழகி வாழ்பவர்கள் அண்ணன் தம்பிமார்கள். அக்கம் பக்கத்தில் வாழ்கின்றவர்கள் உறவு முறைக்காரர்கள்.

**அன்னையும் தந்தையும்** : மிகுந்த கருணையுடையவள் அன்னையாவாள், என்னை எப்போதும் மறவாதவர் தந்தை.

**மனைவியும் பிள்ளையும்** : என்மனைவியோ குயில்போல பேசுபவள், நானும் அவளும் அன்பைக் கொட்டி வளர்த்துக் கொண்டிருக்கிற பிள்ளை ஆகியோர் எனக்கு உண்டு.

**அறிவில் உறைவு** : ஆனால் இவர்கள் எல்லாருமே எனக்கு அயலார்கள் என்று கருதும் வண்ணம் எனக்கு ஓர் உறவு உண்டு அப்படி என் அறிவினில் உறைந்திருக்கும் உறவு தமிழ் என்பதை நீங்கள் அறிவீர்களாக.

உற்றார் உறவினர்கள் எல்லாம் தன் உடலுக்கு வெளியேதான் உறைகிறார்கள் எனவும் தமிழ் மட்டுமே தன் உடலுக்குள்ளேயே அறிவில் உறைவதாகவும் அதனால் தமிழ்வேறு தான் வேறு அல்ல என்பதையும் கவிஞர் உணர்த்துகிறார்.

**வானும் ஒளியும்** : நீலச்சுடரின் தெளிவில் பளிச்சென்று இருக்கிறது வானம். அங்கே கடலின்மேல் பார்த்தால் எல்லாம் ஒளியாகக் காட்சியளிக்கிறது.

**மாலையும் மலையும்** : மாலையில் கதிரவனின் சுடரினில் மலைகள் மூழ்குகின்ற அந்தக் காட்சி நல்ல இன்பக்காட்சியாகும்.

**விந்தை** :இவற்றையெல்லாம் உயர்வானவை என்று கவிஞர்கள் எழுதுகிறார்கள். அப்படி எழுதுகின்ற கவிஞர்கள் தமிழின் விந்தையை விளக்கி எழுதும் தகுதியுடையவர்களாக இருக்க இயலுமோ? இயலாது.

இயற்கையழகெல்லாம் தம்மைப் பொன்ற கவிஞர்களால் எழுதமுடியும். ஆனால் தமிழின் விந்தையை யாராலும்எழுத முடியாது. இவ்வாறு செம்மொழியின் பெருமையைப் போற்றுகிறார் பாரதிதாசன்.

**சோறும் கறியும்** : செந்நெல்லை அரிசியாக்கி வேகவைத்துச் சுவையாக்கிய சோறும் பசுவின் நெய்யினால் சமைத்த காய்கறிகளின் வகையும்.

**முதழரையும் மிளகும்** : சுவையில் தனக்குத் தானே நிகர் என்று சொல்ல வல்ல முதிரைத் தானியமும் கட்டித்தயிரோடு மிளகின் சாறும்,

**கிழங்கும் அப்பமும்** : மிகவும் இனிய சுவை பயக்கும் கிழங்கும் கண்டாலே நாவில் இனித்திடுகின்னற அப்பமும்.

இவையெல்லாம் உடலை வளர்க்கும் உணவு வகைகள். ஆனால் உடலோடு தமிழன் என்ற உணர்வை வளர்ப்பதுதான் தமிழ் என்பதை,

**உணர்வு : 'உன்னை வளர்ப்பன தமிழா! – உயிரை**

**உணர்வை வளர்ப்பது தமிழே!'**

என்று வலியுறுத்துகிறார் பாரதிதாசன்.

**முடிவுரை**

தமிழர்கள் தம் வாழ்வில் அனுபவித்த இன்பங்களை விரும்பும் இனிமைகளைப் பட்டியலிட்டு அவற்றையெல்லாம்விட இனிமையில் உயர்வானது தமிழ் என்று எணர்த்த முயல்கிறார் பாரதிதாசன்.

## 3. வாழ்க்கைத் தத்துவங்கள் - கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

**முன்னுரை**

இளைஞர்களுக்கு வழி காட்டுவதில் ஆர்வமுடையவர் கவிமணி. புத்தரின் வரலாற்றை ஆசியசோதியாக எழுதியவர். எளிமையான நடையில் , புத்தனைப்போல் கவிமணி அறிவுரை கூறுவதாக இக்கவிதை அமைந்துள்ளது.

**நாமே துணை:** **'**தீதும் நன்றும் பிறர்தரவாரா என்றார் ' கணியன் பூங்குன்றனார்,

**"**நாமே நமக்குத் துணை யானால்

நாடும் பொருளும் நாற் புகளும்

தாமே நம்மைத் தேடிவரும்'' என்ற உலகியல் உண்மையை உரைக்கிறார் கவிமணி. எனவே பிற துணைகளை நம்பி வாழ வேண்டாம் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்தும் கவிமணி தன் கருத்தை வலுப்படுத்துவதற்காகச்

'சற்றும் இதற்கொர் ஐய முண்டோ?' என்று வினவி இல்லை என்ற விடையைப் படிக்கும் நம்மையே சொல்லச் செய்து விடுகிறார்.

**வெல்லும் படைகள்** : உலகம் பிரச்சனைகள் நிறைந்தது ஒவ்வொரு சவால்களையும் வெல்வதற்கும் ஒவ்வோர் உத்தி உள்ளது. அந்த உத்திகளைப் படைக் கருவிகள் என்று உருவகம் செய்கிறார் கவிமணி. அவர் கூறும் நெறிகளாக..,

**1.**நெஞ்சில் நிறைந்த கருணை

**2.**நேயம் கொண்ட நெறி அல்லது வழிமுறை

**3.**எல்லையற்ற பொறுமை

இவற்றை உடையவர்களுக்கு 'வெல்லும் படைகள் வேறுளவோ? என்று மீண்டும் வினாவாகக் கேட்டு இல்லை என்று நம்மைத் தலையாட்டச் செய்கிறார்.

**ஊக்கம்** : ஒரு செயலைச் செய்ய வேண்டுமெனில் அதற்கு ஏற்ப நம் உள்ளம் தயார் நிலையை அடைய வேண்டும். செய்கின்ற செயலில் ஊக்கம் பெருகும்படி உழைக்க வேண்டும். அப்படிச் செய்தால்

'பள்ளம் உயர்மே டாகதோ?

பாறை பொடியாய்ப் போகாதே?

இவ்வாறு 'ஆக்கம் அதர்வினாய் செல்லும் அசைவிலா

ஊக்கம் உடையான் உழை' என்ற வள்ளுவரின் கருத்தில் சிறிது பொடி தூவிசச் சுவையோடு வழங்குகிறார் கவிமணி.

காலமாகிய நதி ஓடிக்கொண்டேயிருக்கிறது. அதில் நம் வர்க்கை நிற்காமல் சென்று கொண்டிருக்கிறது. நடவுளின் ஆணையை நாம் அறிந்து அதன்படி வாழ்ந்தோம் என்றால் இந்த உலகத்தில் சுகமெல்லாம் நாள்தோறும் அடைந்து உங்களால் இன்பமாக வாழமுடியும்….வாழ்வீர்கள் என்று வினாவாகக் கேட்டு உடன்பாட்டு விடையை நம்மிடமிருந்தே வரவழைத்த கவிமணி இறுதியில் அவரே நம்மை வாழ்த்திவிட்டுச் செல்கிறார்.

**முடிவுரை** : கணியன் பூங்குன்றனார் காண்பித்த அதே வழியைச்சுட்டிக் காட்டி ஒருவனுடைய இன்பமும் துன்பமும் அவனவன் விதிவழியே வரக்கூடியது என்தோடு மட்டுமின்றி ஆற்றின் நீர்வழியில் செல்லும் மிதவைபோல் மாற்றமுடியாதபடி நம் வாழ்க்கை செல்லும் என்றாலும் கடவுளின் துணையை நாடினோம் என்றால் அவன் அருள் கிட்டினால் 'ஞாலம் மீது சுகமெல்லாம் நாளும் அடைந்து வாழலாம்' என்பது கவிமணியன் வழிகாட்லாகும்.

## 7. சூழலியல் - கவிஞர்.எஸ்.வைத்தீஸ்வரன்- விரல்மீட்டியமழை

**முன்னுரை** : கவிஞனுக்கு, சுற்றுப்புறத்தின் இயல்பான காட்சிகளும், கவிதைக்குரிய கருவாகிவிடுகின்றன. அவ்வகையில், அமைதியான இரவுப்பொழுதில் தொடங்கி, காலைப்பொழுதின் பரபரப்பு வரையிலான இயல்பான காட்சிகளைக் கவிஞர், சொல்லோவியமாக, **படிம உத்தியில்** படைத்துள்ளார்.இரவுப்பொழுதின் இருளும், அமைதியும், விடியலை நோக்கிச் சிறிது சிறிதாக நகர்கின்றன. இரவின் அமைதியான

இயக்கங்களும், அதைத் தொடர்ந்த விடியலும், காலைப்பொழுதில் மனிதர்களின் பரபரப்பு இயக்கங்களும் கவிதையின் பாடுபொருளாக அமைந்துள்ளன.

**இரவில் இருள் சூழ்ந்த சுற்றுப்புறம்** : பறவை, முட்டைகளை அடைகாக்கும். அதுபோல, இரவுப்பொழுதும், ஒட்டுமொத்தச் சுற்றுப்புறத்தையும், இருள் என்னும் முட்டைக்குள் வைத்துப்பாதுகாக்கிறது.

**எங்கும் அமைதி** : இருள் சூழ்ந்த இரவில், சுற்றுப்புறம் எங்கிலும், அமைதி மட்டுமே நிறைந்திருந்தது.எங்கும், எவ்வித இயக்கமும் இல்லை. ஆதலால், அமைதி சிறிதும் தடைபடவே இல்லை. சூழலின் அமைதி கலையாத அழகினை எடுத்துரைப்பதற்காகக் கவிஞர், வானம் முகம் பார்க்கின்ற தெளிந்த குளத்தையும், அங்கு மென்மையாக வீசுகின்ற தென்றலையும் குறிப்பிட்டுள்ளார்.

**சுற்றுப்புறத்தில் அமைதியுடன் சிறு இயக்கம்** :சுற்றுப்புறத்தில், அனைத்து உயிர்களும் ஓய்வு கொண்டிருந்தன. மாடுகள் அமைதியாக அசைபோட்டு, இரவைக் கழித்தன. இத்தகைய சிறுஇயக்கமே சுற்றுப்புறத்தில் நிகழ்கிறது.

**மலர்கள் மலர்கின்ற நேரம்** : பொழுது மேலும் சென்ற நிலையில், மலர்கள் மலரத் தொடங்கின. வண்டுகள், அவற்றிலிருந்து தேன் உண்ண வட்டமிடுகின்றன.

**மாடுகள் பால் சுரக்கின்ற நேரம்** : மாடொன்று, தனது மடிநிறைந்த பாலினைக் கன்றுக்கு ஊட்ட இயலாமல் தவித்தது. கன்றும், தனது, தாய்ப்பசுவைச் சென்றடைவதற்கு மிகவும் முயல்கிறது.

**இரவின் அமைதி கலைகிறது** : காலை வானில் சூரிய உதயம் தென்படுகிறது.பொழுதுவிடிகிறது. சுற்றுப்புறமும் சோம்பல் நீங்கி விழிக்கிறது. வீட்டின் சுவர்க்கடிகாரங்கள், அனைவரையும் தட்டி எழுப்புகின்றன. மனிதர்களின் இயக்கம் முதலான பல இயக்கங்களால், சுற்றுப்புறத்தின் அமைதியானது, சிறிது சிறிதாகக் கலைகிறது.

**மனிதர்களின் நம்பிக்கை நாள்** :மனிதர்கள், ஒவ்வொரு நாளையும் தமக்குரிய வெற்றி நாளாகக் கொண்டாட ஆசை கொள்கின்றனர். விடிந்த அன்றைய நாளிலாவது, அவ்ஆசை நிறைவேற வேண்டும் என்கின்ற ஏக்கத்துடன் எதிர்பார்க்கின்றனர். அதனால் ஒவ்வொரு நாளும் நாள்காட்டியில், பழைய தேதியைக் கிழித்துவிட்டு, புதிய நாளினை நம்பிக்கையுடன் வரவேற்கின்றனர்.

**செய்தித்தாள்கள் வழியே உலகின் நலன் விசாரித்தல்** : உலகின் நன்மையும், தீமையும், செய்தித்தாள்கள் வழியே, நம்மை வந்தடைகின்றன. உலகின் நன்மையும், தீமையும் ஒருநொடிப்பொழுது, அன்றாடக் கடமைகளில் கவனம் செலுத்தத் தொடங்கிவிடுகிறோம்.

**பூமிப்பந்தின் பெருமூச்சு** : பகல்பொழுதின் தொடக்கமாகிய காலைப்பொழுதானது, மனிதர்களின் அசுர இயக்கத்தினால், மேலும், மேலும் பரபரப்படைகிறது. அவ்வேளைகளில், சுமக்க இயலாத பெருஞ்சுமையினைச் சுமப்பதைப்போல, பூமி பெருமூச்சுவிடுகிறது.

இவ்வாறு, அசுர வேகத்தில், நாளெல்லாம் சுற்றுப்புரம் இயங்குவதும், இரவில், இனம் புரியாத அமைதியில் ஆழ்வதும் அன்றாட நிகழ்வுகளாக அமைவதை ஆசிரியர் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

KAHE

# UNIT-1

## பகுதி: அ

**சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1.தேடிச் சோறுநிதந் தின்று' எனத் தொடங்குகின்ற கவிதையின் ஆசிரியர் யார்?

(அ). கவிமணி (ஆ). அப்துல் ரகுமான் (இ). பாரதியார் (ஈ). சிற்பி பாலசுப்பிரமணியம்

2. தமிழ்ப் புதுக்கவிதைகளின் முன்னோடி யார்?

(அ). பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ). கவிமணி (ஈ). அப்துல் ரகுமான்

3. "குயில்" – கவிதை இதழின் ஆசிரியர் யார்?

(அ). பாரதிதாசன் (ஆ) சிற்பி பாலசுப்பிரமணியம் (இ). அப்துல் ரகுமான் (ஈ). கவிமணி

4. 'பரிதி' என்பதன் பொருள் யாது?

(அ). சூரியன் (ஆ) சந்திரன் (இ). மணி (ஈ). ஓசை

5. கண்ணதாசனின் இயற்பெயர் என்ன?

(அ). சூடாமணி (ஆ) சந்திரன் (இ). கவிமணி (ஈ). முத்தையா

6. கவிக்கோ என்று பட்டம் பெற்ற எழுத்தாளர் யார்?

(அ). பாரதியார் (ஆ) அப்துல் ரகுமான் (இ). கவிமணி (ஈ). பாரதிதாசன்

7. விடியல் நேரத்தின் இயல்பை வெளிப்படுத்தும் கவிதை எது?

(அ). மரங்கள் (ஆ) மண் (இ). விரல் மீட்டிய மழை (ஈ). வாழ்க்கைத் தத்துவங்கள்

8.தமிழ்ப் புதுக்கவிதையின் முன்னோடி யார்?

அ)பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி ஈ) அப்துல்ரகுமான்

9. பாரதிதாசன் நடத்திய கவிதைத் திங்களிதழ் எது?

அ) தென்றல் ஆ) இந்தியா இ) பாலபாரதி ஈ) குயில்

10. உமர்கய்யாம் கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?

அ) அப்துல்ரகுமான் ஆ) கவிமணி இ) தமிழன்பன் ஈ) மு.மேத்தா

11. கவிஞர் கண்ணதாசனின் இயற்பெயர் என்ன?

அ) நாராயணன் ஆ) சொ.விருதாச்சலம் இ) முருகேஷ் ஈ) முத்தையா

12. கவிக்கோ. அப்துல் ரகுமானின், சாகித்திய அகாதமி விருது பெற்ற நூல் எது?

அ) பால்வீதி ஆ) நேயர்விருப்பம் இ) ஆலாபனை ஈ) அவன் அவள் அது

13. மானுடர் கரங்களில் அகப்பட்ட மண்ணின் கைதிகள்_______.

அ) மரங்கள் ஆ) மாடுகள் இ) ஆறுகள் ஈ) மலைகள்

14. வணக்கம் வள்ளுவ நூலின் ஆசிரியர் யார்?

அ) அப்துல்ரகுமான் ஆ) கவிமணி இ) தமிழன்பன் ஈ) மு.மேத்தா

15.இந்நியாவில், முதன் முதலாக நாட்டுமையாக்கப்பட்ட இலக்கியம் யாருடையது?

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி ஈ) கண்ணதாசன்

## *பகுதி – ஆ*

***அனைத்து வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளி:***

1. ‘பாரதிதாசன்’ - குறிப்பு வரைக.
2. ‘பெண்ணே உனக்காக’ - கவிதையின் மையக்கருத்தைச் சுட்டுக
3. ‘வையத் தலைமை எனக்கு அருள்வாய்’ – இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
4. ‘வழக்கு’ என முடியும் குறட்பாக்களின் கருத்துகளை எழுதுக
5. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை – குறிப்பு வரைக

## *பகுதி – இ*

***பெருவினாக்கள்: அனைத்து வினாக்களுக்கும் விடையளி:***

1. பாரதிதாசன் தமிழின் சிறப்பினை எடுத்துரைக்கும் பாங்கினை விவரித்தெழுதுக.
2. இன்னொரு சுதந்திரத்தின் தேவையை, கவிஞர் ஈரோடு தமிழன்பன் விரிக்கும் பாங்கு யாது?
3. விடியல் நேரத்தின் இயல்பினை, ‘விரல் மீட்டிய மழை’ என்ற கவிதையின் வழி விவரி.
4. மரங்கள் மண்ணின் வரங்கள் என்பதை கவிஞர் எங்ஙனம் வலியுறுத்துகிறார்?
5. இந்தியாவின் அவலங்களை, கவிஞர் ஈரோடு தமிழன்பனின் கவிதை வழி விவரி.

**UNIT-2**

**SYLLABUS**

| |
|---|
| **அலகு – II : அற இலக்கியம் :** 1. கொன்றை வேந்தன், 2. நீதிநூல், 3. திருக்குறள், 4. பழமொழி நானூறு |

## கொன்றைவேந்தன்

1. **அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்-**

தாய், தந்தையர் கண்கண்ட தெய்வம்

2. **ஆலயம் தொழுவது சாலவும் நன்று**

கோவிலுக்குச் சென்று இறைவனைத் தொழுவது மிகவும் நல்லது

3. **இல்லறமல்லது நல்லறமன்று**

இல்லறவாழ்வே மிகவும் நன்மை பயக்கக் கூடியது

4. **ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்**

பிறருக்கு உதவி செய்யாதோர் பொருளைத் தீயவர் பறித்துக் கொள்வர்

5. **உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு**

குறைத்து உண்ணுதல் பெண்களுக்கு அழகு தரும்

6. **ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்**

ஊராரோடு பகைத்துக் கொண்டால் குடும்பம் அழிந்து விடும்

7. **எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்**

அறிவியலுக்கு ஆதாரமான எண்ணும், இலக்கிய அறிவுக்கு ஆதாரமான எழுத்தும் நமக்குக் கண் போன்றவை

8. **ஏவா மக்கள் மூவா மருந்து**

செய் என்று சொல்லும் முன்பே குறிப்பறிந்து செயலாற்றும் பிள்ளைகள் அம்ருதம் போன்றவர்கள்

9. **ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு**

பொறாமைப் பேச்சு வளர்ச்சியை அழிக்கும்

10. **அஃகமும் காசும் சிக்கெனத் தேடு**

சிக்கனமாயிருந்து தான்யத்தையும், செல்வத்தையும் தேட வேண்டும்.

11. **கீழோராயினும் தாழ உரை**

உன்னை விடத் தாழ்ந்தோராயினும் நயமாகப் பேசு

12. **குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை**

பிறர் குற்றங்களையே ஆராய்ந்து கொண்டிருந்தால், சுற்றத்தார் என்று எவருமே இருக்க மாட்டார்கள்

13. **கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்**

பலவானாக இருந்தாலும், கர்வப் பேச்சு பேசாதே

14. **கெடுவது செய்யின் விடுவது கருமம்**

நமக்கு ஒருவர் கெடுதல் செய்தால், அதை அப்படியே விட்டு விடுதலே உயர்ந்த செயல்

15. **கேட்டில் உறுதி கூட்டும் உடைமை**

தாழ்வு வந்த போதும் மனந்தளராது இருப்பதே மீண்டும் எல்லாவற்றையும் சேர்க்கும்

16. **கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி**

கையில் இருக்கும் பொருளை விட உண்மையான செல்வம் கல்வியே ஆகும்

17. **கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி**

தேவையிருக்கும் இடம் சென்று உதவி செய்தலே, ஆட்சி செய்வோர் அறிய வேண்டியது

18. **கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை**

எவரையும் பழித்துக் கொண்டே இருந்தால், அனைவருக்கும் அவன் பகையாளி ஆவான்

19. **சான்றோர் என்கை ஈன்றோட்கு அழகு**

பெற்றோருக்குப் பெருமை, அவர் பிள்ளைகள் சான்றோர் எனப் பாராட்டப்படுவதே

20. **சிவத்தைப் பேணில் தவத்திற்கு அழகு**

தவத்திற்கு அழகு இறை நினைவோடு இருப்பதே

21. **சீரைத்தேடின் ஏரைத் தேடு**

புகழோடு வாழ விரும்பினால், பயிர்த் தொழிலில் ஈடுபட வேண்டும்

22. . **சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்**

எந்த நிலையிலும் கூடி இருத்தலே சுற்றத்திற்கு அழகு.

23. **சூதும் வாதும் வேதனை செய்யும்**

சூதாட்டமும், தேவையில்லாத விவாதமும் துன்பத்தையே தரும்

24. **சை ஒத்து இருந்தால் ஐயம் இட்டு உண்**

பொருள் கொடுக்குமளவு இருந்தால், பிறருக்கு உணவிட்டு உண்ண வேண்டும்

25. **சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்**

சோம்பெறிகள் வறுமையில் வாடித் திரிவர்

26. . **தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை**

தந்தை சொல்லெ உயர்ந்த மந்திரம் போலாகும்

27. **தாயிற் சிறந்த ஒரு கோயிலு மில்லை**

தாயே சிறந்த தெய்வமாகும்

28. **திரைகடல் ஓடியும் திரவியம் தேடு**

கடல் கடந்தாவது பொருள் தேட வேண்டும்

29. **தீராக் கோபம் போராய் முடியும்**

கோபம் சீக்கிரமாகப் போய் விட வேண்டும். இல்லையேல் அது சண்டையில் போய் முடியும்

30. **தேடாது அழிக்கின் பாடாய் முடியும்**

பொருளைத் தேடிச் சேர்க்காது, இருப்பதை செலவிட்டுக் கொண்டிருந்தால் துன்பத்தில் முடியும்

31. **தையும் மாசியும் வையகத்து உறங்கு**

தை, மாசி (வெயில் காலம்) மாதங்களில் வைக்கோல் வேய்ந்த வீட்டில் உறங்கு

32. . **தொழுது ஊண் சுவையின் உழுது ஊன் இனிது**

பிறரிடம் வணங்கி அந்த ஊதியத்தில் உண்பதை விட பயிர் செய்து உண்பதே இனிது

33. **தோழனோடும் ஏழைமை பேசேல்**

நெருங்கிய நண்பனிடத்தும் நம் வறுமை பற்றிப் பேசக் கூடாது

34. **நல்இணக்கம் அல்லது அல்லல் படுத்தும்**

நல்லோர் நட்பு இல்லையேல், அல்லல் படுவோம்

35. **நாடு எங்கும் வாழக் கேடு ஒன்றும் இல்லை**

நாடு செழித்திருக்குமானால் எவருக்கும் இன்பமே.

36. **நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை**

சொன்ன சொல் தவறாது இருத்தலே, நிலையான கல்வி கற்றதற்கு அழகு

37. **நீர்அகம் பொருந்திய ஊர்அகத்திரு**

நீர் நிறைந்த ஊரில் வசிக்க வேண்டும்

38. **நுண்ணிய கருமமும் எண்ணித் துணி**

சிறிய கார்யமாக இருந்தாலும், யோசித்து செயல் பட வேண்டும்

39. **நூன் முறை தெரிந்து சீலத் தொழுகு**

நல்ல நூல்களைப் பயின்று, ஒழுக்கத்தோடு நடந்து கொள்

40. **நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகம் இல்லை**

நமக்குத் தெரியாமல் ஒருவருக்கு வஞ்சனை செய்ய முடியாது.

41. **நேரா நோன்பு சீர் ஆகாது**

மனம் ஒப்பி செய்யாத எந்த விரதமும் சிறப்பாக முடியாது

42. **நைபவர் எனினும் நொய்ய உரையேல்**

சக்தியற்றவர் இடத்தும் மனம் நோகுமாறு பேசக்கூடாது

43. **நோன்பு என்பது கொன்று தின்னாமை**

உயிரைக் கொன்று அதை உண்ணாமல் இருப்பதே விரதமாகும்

44. **பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்**

ஒருவர் புண்ணியம் அவர் அடைந்த விளைச்சலில் தெரியும்

45. . **பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்**

சிறந்த உணவாக இருந்தாலும், காலமறிந்து உண்ண வேண்டும்

46. **பிறன்மனை புகாமை அறம் எனத்தகும்**

அடுத்தவன் மனைவியை விரும்பாததே சிறந்த அறம்

47. **பீரம் பேணில் பாரம் தாங்கும்**

தாய்ப்பாலை ஊட்டி வளர்த்தால், அந்தக் குழந்தை பலம் பெறும், நிர்வாக சுமைகளைத் தாங்கும்

48. **புலையும், கொலையும் களவும் தவிர்**

புலாலுண்ணுதல், கொலை, திருடு இம்மூன்றையும் செய்யாதே

## *2- நீதி நூல்*

## ஆசிரியர் : மாயவரம் வேதநாயகம்.

1. பெற்றோரை மறவாதீர்:சிறுபொருள் தந்தவரையும் வாழ்நாள் முற்றும் மனத்தில் நினைக்க வேண்டும் என்பது பெரியோர் திருமொழி. அப்படியானால் நம் உடல், உயிர், வாழ்வு எல்லாம் தந்தருளிய தாய் தந்தையரை மறவாதிருப்பதல்லாமல், செய்யும் கைம்மாறு இல்லை.

2.இரத்தத்தைப் பாலாகத் தந்த தாயை மறவாதீர்:கடவுளைத் தொழுது கருவுற்றுக் கசக்கும் மருந்துண்டு பல துன்பங்கள் அடைந்து பத்துத்திங்கள் சுமந்து பெற்றெடுத்துப் பாலூட்டி வலிமையுடன் வளர்த்த அருமைத் தாயை நெஞ்சமே வணங்குவாயாக!.

3.பெற்றோரையே தெய்வமாகப் போற்றுங்கள்:எல்லா உலகங்களையும் படைத்துக் காக்கும் ஆண்டவனைத் தொழவேண்டுமானால் அம்மையே அப்பா என்று ஒப்புரைத்துத் தொழுவோம். கண்கண்ட தெய்வமாகக் காணப்படும் தாய் தந்தையருக்கு எங்கும் ஒப்பில்லை அவர்கள் திருவடியை நெஞ்சே போற்று!.

4.பெற்றோரைப் போற்றாதவர்கள் நரகத்தில் துன்புறுவர்:வைத்து வளர்த்தவர்க்குப் பூ, நிழல், பழம் நல்காத மரத்தை வெட்டி எரிப்பது போன்று, தாய் தந்தையரை வணங்காத அறிவிலாரை ஆண்டவன் இருள் உலகில் தள்ளி வருத்துவன்.

5.முதுமையிலும் மதித்து நடங்கள்:பெற்றவர்கள் பிள்ளைகள் பொருட்டு அளவிலாத் துன்பம் அடைந்தனர். அத்துன்பத்திற்கு ஈடாக மூன்று உலகமும் கொடுப்பினும் போதா. அவர்கள் தங்கள் மூப்பினாலும், சோர்வினாலும் கடுஞ்சொற்கள் சொல்ல நேர்ந்தால், அச்சொற்களை வெல்லப்பாகென்று கொண்டு அவர்களைப் போற்றிவரல் மக்கட்குக் கடன்.

## 3. திருக்குறள்

### பண்புடைமை

பெருமை முதலிய சிறந்த குணங்களிலிருந்து ஒருவன் வழுவாது நின்று எல்லோரது இயல்புகளையும் அறிந்து ஒத்து ஒழுகும் தன்மையே பண்பாகும். இப்பண்பினை விளக்குவதாக இவ்வதிகாரம் அமைந்துள்ளது.

**1. பண்புடைமையை எய்துதல்**

எல்லோரிடத்தும் எளிமையான தன்மையுடையவராதலின் பண்புடைமை என்னும் நன்னெறியை அடைவது எளிது என்று சொல்லுவர் அறநூலோர். குணங்களால் நிறைந்த தன்மை உடையதாலும், உலகத்தைத் தன்பால் வசீகரிப்பதாலும், தொல்லோர் சென்ற நன்னெறி என்பதாலும் பண்புடைமையை அனைவரும் எளிதில் பின்பற்றி ஒழுகுதல் வேண்டும் என்பதற்காக நூலோர் இங்ஙனம் கூறுகின்றனர்.

**2. பண்புடையராவதற்குரிய காரணம்**

எல்லோரிடத்திலும் அன்புடையவனாய் இருத்தலும் அனைத்து நல் இலக்கணங்களும் உடைய குடியில் பிறந்தவருக்கு உரிய செயல்களை உடையவனாயிருத்தலும் ஆகிய இவ்விரண்டும் பண்புடைமை என்னும் நன்னெறி ஆகும்.

3. **நன்மக்கட் பண்பு உடையவனாதல்**

உயிரோடு பொருந்தாத உடம்பால் ஒத்திருத்தலால் ஒருவன் நன்மக்களுக்கு ஒப்பாக மாட்டான். பொருத்தமான பண்பால் ஒத்திருத்தலே பொருந்துதற்குரிய ஒப்பாகும். எனவே நன்மக்களோடு பெறப்படும் ஒப்பாவது உடம்பினால் ஒத்தல் அன்று.

4. **பண்புடைமை பாராட்டப்படும்**

நீதியையும் அறத்தையும் விரும்புதலும் எல்லோருக்கும் பயன்படுதலுமாகிய நல்லோரினது உயர்ந்த பண்புகளை இவ்வுலகத்தோர் கொண்டாடுவர். எனவே உயர்ந்த பண்புகளைக் கடைபிடித்து ஒழுகுதல் வேண்டும்.

5. **பண்புடையாரின் சிறப்பு**

ஒருவரை விளையாட்டாகப் பழித்துப் பேசுதலும் பேசுபவருக்கு அது துன்பத்தை விளைவிக்கும். ஆதலால், பிறரது இன்ப, துன்பங்களையும் இயல்புகளையும் அறிந்து நடக்கக்கூடிய பண்புடையாரிடத்தில் பகைமை உள்ளபோதும், பண்புகளே காணப்படும். பண்புடையார், இவை இன்னாதவை என்பதை முன்னமேயே அறிந்தவராவார். எனவே அவற்றை ஒருபோதும் செய்ய மாட்டார். இனியவற்றையே செய்வார்.

**6. பண்புடையாரின் உயர்ச்சி**

பண்புடையாரைச் சார்ந்து அமைந்திருப்பதால் உலகம் இடையறாது இயங்கி வருகிறது. அவ்வாறு சார்ந்து இல்லையாயின் உலகமானது மண்ணுள் புகுந்து மறைந்து போகும். எனவே உலகியல் நிலைத்து இயங்குவதற்கு அனைவரும் பண்புடைமையைச் சார்ந்து ஒழுகுதல் வேண்டும்.

**7. அறிவின் பயனானது மக்கட்பண்பு**

நன்மக்கட்கே உரிய நற்பண்பு இல்லாதவர். அரத்தின் கூர்மை போலும் கூரிய அறிவுடையராக இருந்தாலும் ஓரறிவுடைய மரத்திற்கு ஒப்பாகக் கருதப்படுவர். அறிவிற்குப் பயனான மக்கட் பண்பு இல்லையாயின் அறிவும் இல்லாதவர் என்றே கருதப்படுவர்.

**8. பண்புடையாருக்கு இழுக்காதல்**

தம்மோடு நட்பு கொள்ளாது பகைமையே செய்தொழுகுபவர் இடத்திலும் தாம் பண்புடையராக நடந்து கொள்ளாமை அறிவுடையார்க்கு இழுக்காகும். எனவே எத்தகைய தன்மை உடையவருடனும் பகைமை பாராட்டாது பழகுதல் பண்புடைமை ஆகும்.

**9. பண்பின்மையின் குற்றம்**

**பண்பின்மையால்** ஒருவரோடும் கலந்து உரையாடி மகிழும் தன்மை அறியாதவற்கு மிகப் பெரிய உலகமானது பகல்பொழுதிலும் இருள் நிறைந்து காணப்படும். எனவே

எல்லோரோடும் கலந்து பழகும் தன்மை அறியாததால் பண்பில்லாதவர்க்கு உலகியல் தெரியாது என்பது பொருளாகும். எனவே அனைவரோடும் கலந்து மகிழ்தலே பண்புடைமையாகும்.

**10. பண்பில்லாரின் கேடு**

பண்பில்லாதவன் தன் முன்வினையால் பெற்ற பெருஞ்செல்வமானது ஒருவருக்கும் பயன்படாது கெடும் என்பது, நல்ல பசுவின் பாலானது வைத்த கலத்தின் குற்றத்தால் சுவையின்றி கெட்டதைப் போன்றதாகும். உலகின் எல்லாப் பயனையும் பெறுதற்குக் காரணமானது பெருஞ்செல்வம். அப்பெருஞ்செல்வம் பண்பில்லாதவர்க்கும் பிறருக்கும் பயன்படாது போகும்.

## வினைத்திட்பம்

வினையாவது செயல். திண்மையாவது உறுதி. எனவே வினைத்திட்பம் என்பது வினைத்திண்மை. அதாவது வினை உறுதி என்பதாகும். குறிப்பிட்ட செயலை வெற்றிகரமாகச் செய்து முடிப்பவனுக்கு வேண்டிய மனவுறுதியை இவ்வதிகாரம் விளக்குவதாக அமைந்துள்ளது.

**வினைத்திட்பம் என்பதன் விளக்கம்**

ஒரு வினையின் திண்மை, உறுதி என்பது அதனை முடித்தற்கு உரியவனின் மனத்திண்மையே ஆகும். வினை நல்ல முறையில் முடிவதற்குத் துணையாகின்ற படை, அரண், நட்பு முதலானவையும் திண்மைகள் என்று கூறப்பட மாட்டா.

**வினைத்திட்பம் குறித்த கொள்கை**

ஒரு வினையைச் செய்வதற்கு முன்னர் அதற்கு இடையூறு ஏற்படுமாயின் அவ்வினையைச் செய்யாமையும், செய்யும் வினையில் இடையூறு எற்பட்ட வழி அதற்குத் தளராமையும் ஆகிய கொள்கையே நீதி நூல் ஆராயந்த அமைச்சரது கொள்கையாகும்.

**வினை செயலாற்றும் வகை**

இடையூறு ஏற்படுத்துவோருக்கு இடையே இருந்து ஒரு செயலைச் செய்ய வேண்டிய சூழலில் பின்வருமாறு செயல்பட வேண்டும். குறித்த ஒரு செயலை பிறர் அறியாத வண்ணம் முதலில் மறைத்து, பின்னர் பிறருக்குப் புலப்படும் வகையில் செய்து முடிப்பதே வினை செய்யக் கூடிய வகை ஆகும். அதுவே வினைத்திட்பம் ஆகும். அங்ஙனம் இன்றி அவ்வினையானது இடையிலேயே பிறருக்குப் புலப்படுமாயின் செய்பவனுக்குப் பெருந்துன்பத்தைத் தந்து அச்செயலையும் முடக்கும்.

**வினைத்திட்பத்தின் அருமை**

ஒரு வினையை இவ்வாறெல்லாம் செய்து முடிக்கலாம் என வரிசைபட வழி சொல்லுதல் எல்லோருக்கும் எளியதாகும். ஆனால் சொல்லிய வழியில் நின்று அதனை வெற்றியுறச் செய்து முடிப்பது என்பது அனைவருக்கும் அரியவாகும்.

**வினைத்திட்பத்தின் சிறப்பு**

சிந்தனையாலும், செயல் திறனாலும் சிறப்பு பெற்றுப் பிற இலக்கணங்களால் பெருமை பெற்ற அமைச்சரது வினைத்திட்பமானது அரசனுக்குச் செல்வத்தையும், புகழையும் தரக்கூடியதாகும். அரசனாலும் எல்லோராலும் நன்கு மதிக்கப்படக் கூடியதாக அமையும்.

**வினைத்திட்பமுடையவர் எய்தும் பயன்**

ஒரு செயலைச் செய்ய நினைத்தவர் அவ்வினையை முடிப்பதற்குரிய மனவுறுதி உடையவராயிருப்பின், அவர் அடைய எண்ணிய பொருள்கள் எல்லாவற்றையும் அவர் எண்ணியவாறே எய்துவர்.

**வினைத்திட்பம் உடையவரை அறிதல்**

உருண்டு செல்லும் பெரிய தேரின்கண் உள்ள அச்சாணி உருவில் சிறியது. ஆயினும் தேர் ஓட அதுவே அடிப்படை. அதுபோன்று உருவில் எளியவராயினும் எடுத்த காரியத்தில் உறுதியுடன் இருந்து வினையை முடிப்பவர் இவ்வுலகில் உண்டு. ஆதலால் உருவத்தில் சிறுமை கண்டு எவரையும் இகழாது இருத்தல் வேண்டும்.

**வினை செய்யும் வகை**

பலகாலம் ஆராய்ந்து கலக்கமின்றி மனம் தெளிந்து தாம் செய்வதாகத் தேர்ந்தெடுத்துத் துணிந்த செயலை, பின்னர் மனச்சோர்வில்லாமலும் காலம் தாழ்த்தாமலும் செய்து முடிக்க வேண்டும்.

**வினை செய்யும் உறுதி**

ஒரு செயலைச் செய்ய முயலும் பொழுது முதலில் துன்பம் மிக வருமாயினும் அதனைக் கண்டு தளர்தல் கூடாது. அச்செயல் முடிவில் இன்பம் தரும் என்ற நம்பிக்கை வேண்டும். எனவே எச்செயலினையும் மனவுறுதியோடு செய்தல் வேண்டும்.

**வினைத்திட்பம் இல்லாதவரது இழிவு**

ஒரு செயலைச் செய்வதற்குரிய மனவுறுதி இல்லாதவருக்கு அம்மனவுறுதி அல்லாத பொருள், படை, நட்பு, அரண் முதலிய உறுதிபாடுகளெல்லாம் அமைந்தாலும்

அவை பயனற்றவையே. மனத்திட்பம் இல்லாத அவரைக் கண்டு உலகிலுள்ள உயர்ந்தோர் மதியார்.

## 4.பழமொழி நானூறு
## கல்வி

குடிப்பதற்கு இனிமையான, உவற்பில்லாத நல்லநீர் கிணற்றைத்தவிர வேறு இடத்தில் இல்லையென்று நினைக்கும் கிணற்றுத்தவளை போல், தாமும் கருதாமல். நாள் முழுவதும் வெறுப்பின்றி இனிதாகப் படித்தலைக் காட்டிலும் அறிஞர்களிடம் பாடம் கேட்டல், ஊன்று கோல் போல் உதவுமாதலால் **"கற்றலைவிட கேட்டலே"** மேல் என்கிறார் முன்றுரையரையனார்.

### அறிவுடைமை

மூங்கிலைப் போன்று நன்கு செழிப்புற்று வளர்ந்த, திரண்ட தோள்களையும், கூரிய வேல்போன்ற கண்களையும் உடைய பெண்ணே பரந்த வானிலே ஒளிவீசிக் கொண்டிருக்கின்ற கதிரவனைக் கையால் மறைக்க இயலுமோ? அதுபோல மிகுந்த அறிவும், ஆற்றலும் கொண்டவர்களை தகாத சொற்களையும், செயல்களையும், பழி பாவங்களையும் அவர்மேல் சுமத்தி , அவர்களின் புகழைக் கெடுக்க இயலுமா?. **"ஞாயிற்றைக் கைமறைப்பார் இல்"** என்பது பழமொழி.

### இன்னா செய்யாமை

நெஞ்சே தீங்கின் பயனை அடைவதற்கு நீண்ட நாட்கள் ஆகும் என்ற எண்ணத்தை உள்ளத்திலிருந்த அகற்றினால் அதன் பயனை உடனே அடைவாய். ஆகவே யாருக்கும், எவ்வுயிர்க்கும் தீங்கு செய்ய நினைப்பதைவிடுத்து நன்மை செய்யப்பழகுவாயெனில் அதுவே சாலச்சிறந்தது.இதில் **"முற்பகல் செய்யின் பிற்பகல்விளையும்"** என்பது பழமொழி.

### கீழோர் வாழ்க்கை

மலையினின்றும் விழுகின்ற ஒளிவிளங்கும் அருவியை உடைய மலைநாடனே, புகழ்நிறைந்த குடியில் பிறந்த அறிவு நிறைந்தவர்கள் வறுமையில் வாடிநிற்க, நல்ல பண்பும், நன்னடத்தையும் இல்லா கீழோர் செல்வத்தால் பெருகிநிற்பது, மிதக்க வேண்டிய சுரக்காய் நீரில் மூழ்கி இருப்பதும், மூழ்கி இருக்கவேண்டிய அம்மி மிதந்து கொண்டிருப்பதற்கும் ஒப்பாகும் என்கிறார். இதில், **'சுரை ஆழ அம்மி மிதப்ப'** என்பது பழமொழி.

### முயற்சி

விருப்பத்துடன் செய்யப்படும் செயல் விரைவில் நிறைவுபெறும் ஆதலால் அதன் பயனையும் உடனடியாகப் பெறமுடியும். ஆகவே முயற்சியே உரிய செல்வத்தைச் சேர்க்கும் என்கிறார். இதில் **'முனிவில்லார் முன்னியது எய்தாமை யில்'** என்பது பழமொழி.

# UNIT-2

**சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. உலகம் நிலைத்திருப்பது யாரால்?

அ). பண்புடையவர்களால் ஆ). செல்வந்தர்களால் இ). வீரர்களால் ஈ). நண்பர்களால்

2. ‘ஞானக்குறள்’ நூலை இயற்றியவர் யார்?

அ).பாரதியார் ஆ).கவிமணி இ). அறிஞர் அண்ணா ஈ).ஔவையார்

3. ‘கற்றலின் கேட்டலே நன்று’ - பழமொழியின் ஆசிரியரின் பெயரைக் குறிப்பிடுக.

அ).முன்றுறையரையனார் ஆ). வேதநாயகம்பிள்ளை இ). ஔவையார் ஈ). திருவள்ளுவர்

4. திருக்குறள் எந்தவகை யாப்பில் அமைந்துள்ளது?

அ) கலிப்பா ஆ) வஞ்சிப்பா இ) ஆசிரியப்பா ஈ) வெண்பா

5. ‘தந்தை சொல்மிக்க மந்திரமில்லை’ - இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

அ) நாலடியார் ஆ) பழமொழிநானூறு இ)கொன்றை வேந்தன் ஈ) மூதுரை

6. ‘கல்வியழகே அழகு’ - எனக் கல்வியின் சிறப்பைக் கூறும் நூல் _________.

அ) நீதிநெறி விளக்கம் ஆ) நாலடியார் இ)கொன்றை வேந்தன் ஈ) மூதுரை

7. ‘தலைநிலத்து வைக்கப்படும்’ என நாலடியார் யாரைக் குறிப்பிடுகிறது?

அ) கற்றோர் ஆ) கல்லாதவர் இ) அரசர் ஈ) செல்வர்

8. நீதிநெறி விளக்கம் என்னும் நூலின் ஆசிரியர் யார்?

அ) சிவப்பிரகாசர் ஆ) குமரகுருபரர் இ) வேதநாயகர் ஈ) ஔவையார்

9. பண்ணிய பயிரில் _______________ தெரியும்.

அ) விளைச்சல் ஆ) புண்ணியம் இ) உழைப்பு ஈ) முயற்சி

10. ‘பழகு தமிழ்ச்சொல் அருமை நால் இரண்டில்’ - இதில், ‘நால்’ என்பது எதைக் குறிக்கிறது?

அ) நாலடியார் ஆ) நான்கு இ) இனியவை நாற்பது ஈ) கார் நாற்பது

11. திருக்குறளின் பொருட்பாலில் அமைந்துள்ள இயல் எது?

அ) பாயிரவியல் ஆ) அரசியல் இ) களவியல் ஈ) ஊழியல்

12. மக்கட்பண்பு இல்லாதவர் எத்தகையவர்?

அ). விலங்கு ஆ). செடி இ). மரம் ஈ). கொடி

13. ஔவியம் என்பதன் பொருள் என்ன?

அ). பொறாமை ஆ). இனிமை இ). தனிமை ஈ). சான்றாண்மை

14. நாலடியாரின் ஆசிரியர் யார்?

அ). திருவள்ளுவர் ஆ). பாரதியார் இ). முன்றுறையரையனார் ஈ). சமணமுனிவர்கள்

15. முனிவு என்பதன் பொருள் என்ன?

அ). மகிழ்ச்சி ஆ). கோபம் இ). தவிப்பு ஈ). சோகம்

## இரு மதிப்பெண் வினாக்கள்

1. ‘அன்புடைமை’ – எனத் தொடங்கும் குறளை எழுதி விளக்கம் தருக.
2. ‘சுரை ஆழ அம்மி மிதப்ப’ – பழமொழிக்கு விளக்கம் தருக.
3. ‘வழக்கு’ என முடியும் குறட்பாக்களின் கருத்துகளை எழுதுக.
4. தொழுது ஊண் சுவையின் உழுது ஊண் இனிது – பொருள் தருக.
5. ‘பகலும்பாற் பட்டன்று இருள்’ – என்ற குறளின் பொருளைக் குறிப்பிடுக.

# பெரு வினாக்கள்

1. பண்புடைமையின் இன்றியமையாமையைத் தொகுத்துரைக்க.
2. ஔவையார் கூறும் நீதிக்கருத்துகளை கொன்றைவேந்தன் வழி புலப்படுத்துக.
3. கல்வியின் சிறப்பை, நாலடியார் வழி விளக்குக.
4. பண்புடைமை அதிகாரத்தின் கருத்துக்களை விளக்குக.

# UNIT-III

## SYLLABUS

**அலகு - III : சிற்றிலக்கியம் : 1. முக்கூடற் பள்ளு, 2. நந்தி கலம்பகம், 3. மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது, 4. மதுரை மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ், 5. தமிழலங்காரம்**

## அலகு – III : சிற்றிலக்கியம்: (15 மணிநேரம்)

1. **முக்கூடற் பள்ளு-** 2 பாடல்கள் - சித்திரக் காலிவாலான் (நெல்வகைகள்)
   குற்றாலத் திரிகூட மால்வரை (மீன் வகைகள்)
2. **நந்தி கலம்பகம்-** 5 பாடல்கள்- என்னையே புகழ்ந்தேன், பதிதொறு புயல்பொழி, இந்தப்புவியில், அடிவிளக்கும் துகில், வானுறுமதியை
3. **மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது** –தமிழின் சிறப்பு
   பாடியருள பத்துப்பாட்டும் - விளம்பக்கேள்.
4. **மதுரை மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்** –3 பாடல்கள்-
   அம்புலிப் பருவம் - கண்டுபடு குதலை
   தாலப் பருவம் – தென்னன்
   முத்தப் பருவம் – உருகி உருகி
5. **தமிழலங்காரம்** –10 பாடல்கள்
   1. கடல் நீரில் கல் மிதக்கும், 2. வண்டமிழ் ஆற்றுதி, 3. கோளத்தை முட்டி 4. எக்காலம் என்று, 5. கடவூர் மயானத்தொர், 6. தேவாதி தேவன், 7. விண்மாரி, 8. தேவர் முனிவர், 9. விண்மாரி, 10. அத்தனை பொத்து.

## 1. முக்கூடற் பள்ளு – நெல் வகைகள்

சித்திரக் காலிவாலான், சிறைமீட்டான், மணல்வாரி, செஞ்சம்பா, கருஞ்சூரை, சீரகச்சம்பா, முத்து விளங்கி, மலைமுண்டன், பொற்பாளை, நெடுமூக்கன், அரிக்கிராவி, மூங்கிற் சம்பா, கத்தூரி, வாணான், கடைக்கழுத்தன், இரங்கள் மீட்டான், கல்லுண்டை, பூம்பாளை, பாற்கடுக்கன், வெள்ளை, புத்தன், கருங்குறுவை, புனுகுச் சம்பா ஆகிய வித்து வகைகளையெல்லாம் இரண்டு பூவுக்கும் காணுமளவுக்குத் தொகுத்து விதைச் சேரில் போட்டிருக்கிறேன் பண்ணையாரே.

## முக்கூடற் பள்ளு – மீன் வகைகள்

குற்றாலத்தைத் தன்னிடத்தே கொண்ட திரிகூடமாகிய பெரிய மலை முகடுகளில், மேகங்கள் சென்று படிந்து பொழிந்து, மழை நீரானது ஒன்று சேர்ந்து, பொருநை நதியோடு சேர்தலை விரும்பி, முக்கூடற் பதியை வலங்கொண்டு வரும்.

நீர் வற்றுதல் இல்லாத மடுக்களில் பரவை, குரவை, வாளை, கோளை, தேளி, மயிந்தி, உழுவை, அயிந்தி, கூனி, மணலி, ஆறால், ஓராமீன், பிடிக்கவே முடியாத அயிரை, கெண்டை, கெளிறு, பெரிய வரால்கள் ஆகியவை பலவும் கிடைக்கும். அவை எல்லாம் புதுவெள்ளம் வரவும் எதிரேறிச் சென்று அணையிலே பாயும். அங்கிருந்து கால்வாய்களிலே பாயும். பின்னர், குளத்திலே பாய்ந்து வயல்களில் எல்லாம் பாயும். இத்தகைய வளமுடையது சிற்றாறு.

அது சிற்றாறு என்பதொரு பெயரினைப் பெற்றிருந்தாலும்கூட, ஒப்பற்ற சிறிய உருவத்தையுடைய வாமனரின் பெருமையைப் போல்வதாகும். பள்ளியர்களே! அந்தச் சித்திராநதி பெருகிவருகின்ற அழகினைப் பாருங்கள்.

## 2. நந்திக் கலம்பகம்

**நந்தி மன்னன் மாலையின் மாண்பு**

**நந்தி மன்னன் வீரம்**

ஊர்தோறும் மேகங்கள் சொரிகின்ற மணிகளையும் மூங்கில்கள் தந்த பெரிய முத்துக்களையும் கொடுத்து, அவ்வூர்களில் உள்ள நெற்கதிரைத் தொகுத்துக் கொண்டு வருகின்ற நீர், கரையோடு மோதி வழியும் காவிரியின் வளம் பொருந்திய நாட்டையுடையவனே! செல்வத்தைத் தருகின்ற குடையும், நிலமகள் உரிமையும் ஆகிய இவற்றையுடைய நந்திமன்னனே! அறிவில்லாதவரான அரசர் உன்னுடைய தாமரை மலர்போன்ற திருவடிகளை வணங்காதவராகித் தேவர் உலகத்தை ஆள்பவராவர்.

**நந்தி மன்னன் கொடைப் பெருமை**

புலவர்கள் நந்தி மன்னனை நாடி வருகின்றனர். அவன் புகழைப்பாடி பெரும் பரிசில்களைப் பெறுகின்றனர். பரிசிலைப் பெற்ற அப்புலவர்கள் பெரிய செல்வராகி மன்னராக மாறிவிட்டனர். எனவே இரவலர்கள் அங்கு இல்லை. இனி இந்த மண்ணுலகில் இரவலர்கள் உண்டென்றால் அவை குமுதமாகிய அல்லி மலர்களே ஆகும். ஏனெனில் அவை மட்டும் இரவில் அலர்கின்றன(மலர்கின்றன).

**நந்தியின் நாட்டில் முத்துச் சிறப்பு**

நந்திவர்மன் நாட்டில் மகளிர் காலில் அணிந்துள்ள சிலம்புகளில் முத்துக்கள் விளங்கித் திகழும். அவர்கள் மேலாடைமீதும் மாலையாகச் செய்து அணிந்திருப்பதும் முத்துக்களே ஆகும். முத்துக்கள் குவியல் குவியலாக வேடுகளில் குவித்து வைக்கப்பட்டிருக்கும். அவற்றின் ஒளி விளக்கேற்றி வைத்திருப்பது போல் தோன்றும். போர்க் களத்திலும், படைவீடுகளிலும் இம்முத்துக்களே ஒளிவீசித் திகழ்கின்றன.

**கையறுநிலை**

நந்திவர்மனே! உன் முக அழகு நிலவை அடைந்து விட்டது. உன் புகழ் கடலில் மூழ்கி விட்டது. உன் வீரமோ புலியிடம் புகுந்து விட்டது. உன் கரங்களின் கொடை கற்பக மரத்திடம் சேர்ந்து விட்டது. உன் நாட்டின் திருமகள் திருமாலிடம் புகுந்து விட்டாள். உன் உடல் செந்நிற நெருப்பை அடைந்தது. எல்லாமே உன்னை விட்டு அகன்று விட்டன. எனவே நீயே இல்லை எனும் போது நானும் என் வறுமையும் எவ்விடம் போவது!.

## 3. மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது

**தமிழின் சிறப்பு**

திருமுருகாற்றுப்படை முதலாக மலைபடுகடாம் ஈறாக அமைந்த பத்துப்பாட்டு நூல்களும், நற்றிணை முதலாகப் புறநானூறு இறுதியாக அமைந்துள்ள எட்டுத்தொகை நூல்களும், குற்றமில்லாது அறங்களைக் கூறும் நாலடியார், கார்நாற்பது, களவழி நாற்பது முதலிய பதினெட்டு நூல்களும், இளஞ்சூரியர், முதுசூரியர் என்னும் இரட்டைப்புலவர்கள் பொன்மாலைகளால் மாதைநாதர் மீது பாடிய திருவாமாத்தூர்க் கலம்பகமும், மூன்று படைகளோடு கலிங்கத்தின்மீது போர்தொடுத்து ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனைப் பாடிய கலிங்கத்துப்பரணியும், புகார் நகரில் இரண்டாம் இராசராச சோழனிடம் ஒவ்வொரு கண்ணிக்கும் ஓராயிரம் பொன் பரிசில் பெற்ற ஒட்டக்கூத்தர் பாடிய இராசராச சோழன் உலாவும், குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழும், பேரறிவுடைய சான்றோர், தேவாரம் முதலிய நூல்களாகிய மெய்காப்பாளர் காக்க, மனத்தே வீரம் செறிந்து தீவினை நீங்கச் செயல் செய்து வரும் கவிதையாம் மன்னனே(தமிழ்).

தமிழே! உனக்குத் தலைமைப் பேறு அளித்தால், உமக்கு ஒப்பாவர் ஒருவருமிலர். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்களும் வயலின் வரப்புகளாகவும், துறை, தாழிசை, விருத்தம் என்னும் பாவினங்கள் மடைகளாகவும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நாற்கரணங்களையும் நல்ல ஏர்களாகவும் கொண்டு சொல்லேருழவர் உழவு செய்ய, வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம், மாகதம் ஆகிய செய்யுள் நன்னெறிகளே விதைகளாக அறம், பொருள், இன்பம், வீடு ஆகியன விளைபொருள்களாயின. இப்பயிர்களின் இடையே வளரும் களைகளாகிய போலிப் புலவர்களின் கூட்டம் பெருகாமல் குட்டுவதற்கு அதிவீரராம பாண்டியனும், செவியை அறுப்பதற்கு வில்லிப்புத்தூரனும், தலையை வெட்டுவதற்கு ஒட்டக்கூத்தனும் இருந்தமையால், தமிழே! நீ கிளைத்துச் செழித்து வளர்ந்தாய்.

தமிழே! பால், முந்திரி, வாழை, கரும்பு, இளநீர் போல் பல்வகையான சுவைகளைத் தருகின்றாய். தெளிந்த அமுதமாகவும், மேன்மையான வீடுபேற்றை அளிக்கும் கனியாகவும், அறிவினால் உண்ணப்படும் தேனாகவும் விளங்கும் தமிழே! உம்மிடத்தில் மகிழ்ந்து உரைக்கும் ஒரு விண்ணப்பம் உண்டு கேட்பாயாக.

## 4. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

**அம்புலிப் பருவம்**

கற்கண்டு போல் இனிய மழலைமொழி பேசும் இளங்கிளியாகிய இவளுக்கு ஒரு கலாபேதம் என்ன உன்னைக் கலைகளும் மறைகளும் முறையிடுகின்றவற்றைப் பார்த்தோ, கலைச்செல்வம் என அறிந்தோ, வண்டுகள் பொருந்திய மாலையணிந்த அழகிய தந்தையாகிய மலையத்துவச பாண்டியன் பிறந்த குலத்திற்கு முதலவன் என்பது கருதியோ, வளர்கின்ற சடைமுடியில் எம்பிரான் குளிர்ந்த இனிய மாலையாகத் தரித்திருப்பதைக் கருதியோ, ஆழம் அமைந்த திருப்பாற்டலில் தோன்றிய இலக்குமியாகிய தோழியுடன் நீ பிறந்திருப்பதை ஆராய்ந்தோ, தலைவியாகிய இவ்வம்மை உன்னை விரைந்து வருக எனக் கூப்பிடப்பெறுந் தன்மையடைந்தாய். உனக்குப் பொருந்தக் கூடிய சிறப்பு அல்ல(உயர்ந்தது இது). ஆகையால் சந்திரனே! இவளுடன் ஆட வருக, ஆணித்தரமான பொன் மலையாகிய வில்லைக் கொண்ட சிவபெருமானுடன் சேர்ந்த மாணிக்கவள்ளியுடன் நிலாவே விளையாட வருக.

**முத்தப் பருவம்**

இளகி இளகி நெகிழ்ந்து நெகிழ்ந்து உள்ளம் உடைந்து கசிவுற்று, அக்கசிவு பெருகுகின்ற எழுமையும் தொடர்ந்த அன்பையுடைய அடியார்களின், மனம் ஆகிய குளத்தில் மிகுதியாகச் சுரந்து பெருகுகின்ற பேரின்பப் பெரு வெள்ளமே! சிறியவர்களாகிய நாங்கள் அடைந்த பெரிய பேராயிருப்பவளே! பெருகுகின்ற மணமுடைய கூந்தலையுடைய பெண் யானையே! கொடி போன்ற நுட்பமான இடை முறியும்படி தோன்றியுள்ள குங்குமச்சேறு அணிந்துள்ள மலைகள் போன்ற கொங்கைகள் இரண்டைத் தாங்குகின்ற மலர் பூத்திருக்கும் கொம்பு போன்றவளே! இனிமையான குழலோசையினும் இனிமை முதிர்ந்த இளங்குதலையாகிய மழலைமொழி தோன்றுகின்ற சிவந்த ஆம்பல் மலர் மணம் விரிகின்ற செம்மையான

கோவைப் பழம் போன்ற வாயின் முத்தத்தைத் தந்தருள்வாய் முத்துப் போன்றவளே! முக்கட் சுடர்க்கு விருந்திடும் மும்முலையாய் முத்தம் தருக.

## 5. தமிழலங்காரம்

**திருநாவுக்கரசருக்கு அருளிய செயல்தமிழ்**

சமணர்கள் திருநாவுக்கரசரைக் கருங்கல்லில் பிணித்துக் கடலிற் செலுத்தினர். அப்போது, அதையே தெப்பமாகக் கொண்டு கரையேரினார். கொலை செய்ய தன்மீது ஏவிவிட்ட யானையைத் தன்னை வலம் வந்து வணங்குமாறு செய்தார். சுண்ணாம்புச் சூளையில் இடப்பட்டு, ஏழு நாட்கள் இருந்து, எவ்வித ஊறும் இன்றி வெளியே வந்தார். பாம்பு தீண்டி இறந்த அப்பூதியடிகளின் மகனை உயிர்த்தெழச் செய்தார். இவை யாவும் நிகழ்ந்தது திருநாவுக்கரசரது தமிழ்ப் பாடலேயென்பதாம்.

**தீமையை நலமாகச் சேர்த்தது தமிழே**

திருமங்கையாழ்வார் என்பவர் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். அவர் செய்த செயல் களவும், வழிப்பறியுமேவாகும். அவ்வாறு தாம் சேகரித்த பொருட்களை எல்லாம் பாகவதர்களுக்கே செலவிட்டார். திருமாலைப் பலவிதமான தமிழ்ப் பாசுரங்களால் பாடி துதிசெய்து வந்தார். அவர் செய்த களவு மற்றும் வழிப்பறி பாதகச் செயல்கள் அனைத்தும் தவப்பயன்களாக மாறின. திருமங்கையாழ்வார் திருமாலின் திருவருளை தேவர்களும் வியக்கும்படி பெற்றார். அதற்குக் காரணம் திருமாலை தமிழ்ப் பாசுரங்களால் பாடியதேயாகும்.

**பலா தழைக்கத் தமிழ் பாடினள் ஔவை**

தமையன் தம்பியான வேடர் இருவருக்கும் பொதுவான பலாமரத்தை, அண்ணன் பகையால் வெட்டினான். பலா மரத்தின் பலனை இருவரும் இழந்தனர். ஔவையின் அருள் வாக்கால் நிலனும் வானும் அறியும் வண்ணம் பழையபடி பலா தழைத்துப் பழுத்தது. அத்தகைய அருள் விண்ணைத்தொடுமளவு உயர்ந்த பொதியை மலையில் பிறந்து வளர்ந்த தமிழுக்கே உரியது.

**பத்திரகிரியார் பாடலும் தமிழே**

பத்திரகிரியார் என்பவர் எக்காலக் கண்ணி என்ற தமிழ்ப் பாடல் பாடினார். அதன் பயனாக சற்குரு நாதரான பட்டினத்தாரால் ஆளப்பெற்று, எமவாதை நீங்கி, தன் நாயும் மறுபிறவியில் பெண்ணாகப் பெற்று, முத்தியுற்றார். இந்த அற்புதமான நிகழ்வை இன்றும் உலகில் பேசுவர்.

**அபிராமிபட்டர்க்கு ஆருயிர் தரும்தமிழ்**

திருக்கடையூரில் அம்பிகையை வழிபடும் சாக்த நெறியில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர் அபிராமிபட்டர். தை அமாவாசையன்று அம்பிகையின் அருள்மிகு தோற்றத்தை ஆனந்தமாய்க் கண்டு

பரவசமுற்றிருந்த நிலையில் இருந்த அபிராமிபட்டர் வாய் குழறி அரசரிடம் இன்று பௌர்ணமி என்று கூறினார். தியானம் கலைந்தெழுந்ததும் நிகழ்ந்ததை உணர்ந்து வருந்தினார். அம்பிகையை வேண்டி அபிராமி அந்தாதி பாடினார். அம்பிகை தனது தோடு ஒன்றை வானவீதியில் தவழ விட்டாள், அ∴து ஒளியைப் பொழிந்து பௌர்ணமியைப் போல் பிரகாசித்து ஜொலித்தது.

**வெண்காடர் சிவமா மேவச் செய்யும் தமிழ்**

திருவெண்காடு என்னும் ஊரில் பெருஞ்செல்வச் செழிப்போடு வாழ்ந்து வந்த பட்டினத்தார் செல்வ நிலையாமையை உணர்ந்து துறவு பூண்டார். இவர் பல இடங்களில் பிச்சை எடுத்து உண்டு வாழ்ந்து வந்தார். இவரது இந்தச் செயல் தமக்கு அவமானம் தருவதாக அவரது தமக்கை கருதினார். அவரைக் கொல்ல நஞ்சு கலந்த அப்பத்தை உண்ணத் தந்தார். இறைவன் திருவருளால் உண்மையுணர்ந்து அந்த அப்பத்தைத் தந்த அவரது தமக்கையின் வீட்டின்மீது எறிந்தார். வீடு தீப்பற்றி எரிந்து சாம்பலானது. கழுமரத்தையும் எரியும்படிப் பாடினார். திருவொற்றியூர் கடலருகில் வந்து தன்னை மணலில் புதைக்கும்படி செய்து இலிங்க உருவில் எழுந்தார்.

**ஆராவிடம் கம்பர் அகலச் சொலல்தமிழ்**

சிதம்பரத்தில், இராமாயண நூலைக் கேட்டுச் சிறப்பிக்கும்படி சொன்ன கம்பரிடம், மூவாயிரம் அந்தணர்கள் ஒன்றுகூடி விடத்தால் இறந்த ஒருவனை உயிர்ப்பிக்க வேண்டினர். கலைமகள் அருளால் கம்பர், பாட்டைப் பாடிய போது விடம் நீங்கியது. இறந்தவன் உயிர் பெற்று எழுந்தான். அச்சிறப்பைத் தமிழ் உதவியது என்பதாம்.

**தந்தி முகன்பணம் தரச்செயும் தமிழே**

இரட்டைப் புலவர்கள், குளத்தில் நீராடப்போன சமயம், கையிலிருந்த ஒரு பணத்தை, கரையிலிருந்த மனிதர், முனிவர், தேவர்களுக்கும் முழுமுதலாகத் திகழும், யாவரும் போற்றித் துதிக்கும் ஆனைமுகத்தானாகிய விநாயகரிடம் வைத்துச் சென்றனர். அவர்கள் நீராடிவிட்டுத் திரும்பி வந்து பார்த்தபோது பணம் காணவில்லை. விநாயகர்தான் தமது பணத்தைத் திருடியிருப்பார் என்றெண்ணி ''தம்பியோ பெண் திருடி'' என்ற தமிழ்ப்பாட்டுப் பாடினர். விநாயகர் முன்னைய பணத்துடன் ஒரு பணம் சேர்த்துக் கொடுத்தார் அருள்புரிந்தார்.

**மன்னவன் மிசைமண் மாரிபெய் திடல்தமிழ்**

விண்ணிலிருந்து பொழியும் மழைக்கு ஒப்ப, வாரி வழங்கும் வள்ளலைப் போன்ற வேடமிட்ட திருமலைராயன் என்னும் மன்னன், புலவர்க்குப் பரிசில் வழங்காது கண்ணீர் மல்கச் செய்து பலரைச் சிறை வைத்தவன். அவனிடம் காளமேகப்புலவர் யமகண்டமென்ற நூல் பாட ஒப்பி, புலவரைச் சிறை நீக்கி நூலைப் பாடினார். திருமலைராயன் காளமேகப்புலவரை மதிக்காது அலட்சியம் செய்தான். இறுதியில் அவனை மண்மாரி பெய்து மாயும்படியும் செய்தது தமிழ்ப் பாட்டுப் பாடியே என்பதாம்.

**அகத்தியர் செந்தமிழ் அறிந்தவர் தேவரே**

பரமசிவனைப் போல, முனிவர்களுக்கு எல்லாம் அரசராக விளங்கும் பொதியை அகத்திய முனிவர், முத்துப் போன்ற வெண்ணிறக் கலைமகள் அருள் கொண்டு உண்டாக்கிய தமிழ் மொழியானது, இவ்வுலகத்தில் எப்படிப் பட்டவரையும் தேவர்களுக்கும் தேவராகச் செய்யவல்லது என்பதாம்.

1.

KAHE

# UNIT – 3

**பகுதி: அ**

**சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. யாருடைய காலத்தைச் சிற்றிலக்கியக் காலம் என்று கூறுவர்?

அ) பாண்டியர் ஆ) சோழர் இ) பல்லவர் ஈ) நாயக்கர்

2. கலம்பக இலக்கியத்தில் பாடப்படும் உறுப்புகள் எத்தனை?

அ) ஆறு ஆ) பன்னிரண்டு இ) பதினெட்டு ஈ) தொண்ணூற்றாறு

3. போலிப்புலவர்களின் செவியை அறுப்பவர் யார்?

அ) பிள்ளைப்பாண்டியன் ஆ) வில்லிப்புத்தூரார் இ) ஒட்டக்கூத்தர் ஈ) நக்கீரர்

4. பலா தழைக்கத் தமிழ் பாடிய புலவர் யார்?

அ) கம்பர் ஆ) அபிராமி பட்டர் இ) ஔவையார் ஈ) பத்திரகிரியார்

5. முக்கூடற்பள்ளு நூலின் பாட்டுடைத் தலைவன் யார்?

அ) பள்ளன் ஆ) திருமால் இ) சிவபெருமான் ஈ) பண்ணையார்

6. நந்திக் கலம்பகம் எந்த நூற்றாண்டைச் சார்ந்தது?

அ) கி.பி. 2 ஆ) கி.பி. 5 இ) கி.பி. 7 ஈ) கி.பி. 9

7. போலிப்புலவர்களின் தலையில் குட்டுபவர் யார்?

அ) பிள்ளைப்பாண்டியன் ஆ) வில்லிப்புத்தூரார் இ) ஒட்டக்கூத்தர் ஈ) நக்கீரர்

8. ”தொடுக்கும் கடவுள் பழம் பாடல்” என்ற பாடலடியைப் பாடியவர் யார்?

அ) குமரகுருபரர் ஆ) அபிராமி பட்டர் இ) ஔவையார் ஈ) பத்திரகிரியார்

9. முக்கூடற்பள்ளு குறிப்பிடும் பிடிக்கவே முடியாத மீன் எது?

அ) கெண்டை ஆ) கெளிறு இ) அயிரை ஈ) அயிந்தி

10. தண்டபாணி சுவாமிகளின் இயற்பெயர் என்ன?

அ) சங்கரலிங்கம் ஆ) சுந்தரலிங்கம் இ) மகாலிங்கம் ஈ) சிவாலிங்கம்

11. சிற்றிலக்கியங்களின் வகைகள் எத்தனை?

அ) 90 ஆ) 93 இ) 96 ஈ) 99

12.காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மன்னன் யார்?

அ) பல்லவர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) நாயக்கர்

13. முக்கூடற் பள்ளு இலக்கியத்தின் ஆசிரியர் யார்?

அ)ஔவையார் ஆ) திருவள்ளுவர் (இ) முன்றுறைஅரையனார் ஈ) என்னாயினாப்புலவர்

14. பலவகைப் பொருள்களைப் பற்றிப் பலவகைப் பாடல்களைக் கலந்து பாடப்பெறும் நூல்?

அ) பள்ளு ஆ) கலம்பகம் இ) உலா ஈ) மடல்

15. நும் பாடப்பகுதியில் சுட்டப்பெறும் பிள்ளைத்தமிழின் ஆசிரியரின் பெயர் சுட்டுக?

அ) என்னாயினாப்புலவர் ஆ) குமரகுருபர் இ) பெயர் தெரியவில்லை ஈ) கவிமணி

16. திருநெல்லேிப் பேச்சு வழக்கு இடம்பெற்ற நூல் எது?

அ) தமிழ்விடுதூது ஆ) நந்திக்கலம்பகம் இ) முக்கூடற்பள்ளு ஈ) தமிழலங்காரம்

17. அரியாசனமுனக்கேயானால் உனக்குச் சரியாருமுன்டோ தமிழே - என்ற வரிகள் இடம்பெற்ற நூல் எது?

அ) தமிழ்விடுதூது ஆ) நந்திக்கலம்பகம் இ) முக்கூடற்பள்ளு ஈ) தமிழலங்காரம்

18. தமிழ்மதுரைக்கரசே தாலோ தாலேலோ என்று தாலாட்டுப் பாடியவர்?

அ) சிவப்பிரகாசர் ஆ) குமரகுருபரர் இ) வேதநாயகர் ஈ) ஔவையார்

19 .முக்கூடற்பள்ளு நூல் இயற்றப்பட்ட காலம் எது?

அ) 1680 ஆ) 1681 இ) 1880 ஈ) 1980

20.'எப்புவிக்கும் மன்னர்கோன்' எனப் புலவர் யாரை நினைந்துப் பாடுகிறார்?

அ) தமிழை ஆ) சேரனை இ) நந்தியை ஈ) சோழனை

## பகுதி: ஆ

**அனைத்து வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளி**

1. சிற்றிலக்கியம் – குறிப்பு வரைக.
2. நந்தி மன்னனின் கொடைப் பெருமையைக் கூறுக.
3. நந்தியின் நாட்டில் முத்துக்கள் எதற்கெல்லாம் பயன்படுகின்றன?
4. முக்கூடற்பள்ளு கூறும் மீன் வகைகளைக் குறிப்பிடுக.
5. தமிழலங்காரம் – குறிப்பு வரைக.

## பகுதி – இ

**பெருவினாக்கள்: அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**

1. தமிழ்விடுதூது கூறும் தமிழின் சிறப்பைக் கட்டுரைக்க.
2. தமிழ்ப் பாடல்களைப் பாடியதால் நிகழ்ந்த அற்புதங்களைக் கட்டுரைக்க.
3. நந்தி மன்னனின் பெருமைகள் குறித்து கட்டுரைக்க.
4. மதுரை மீனாட்சியம்மையின் தாலப்பருவம், முத்தப்பருவ செய்திகளை விளக்கியுரைக்க.
5. முக்கூடற் பள்ளு குறிப்பிடும் நெல் மற்றும் மீன் வகைகளைச் சுட்டுக.

## UNIT-IV

## SYLLABUS

**அலகு – IV : கட்டுரைகள்: 1.** தமிழிசை இயக்கம், 2. தனிப்பாடல்கள், 3. கலைச்சிறப்பு, 4. காளத்திவேடனும் கங்கைவேடனும், 5. ஏட்டில் இல்லாத இலக்கியம்

1. தமிழிசை இயக்கம் – பேரா. க. வெள்ளைவாரணர்
2. தனிப்பாடல்கள் – பேரா. வ. சுப. மாணிக்கனார்
3. கலைச்சிறப்பு – முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்
4. காளத்திவேடனும் கங்கைவேடனும் – சொல்லின்செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை
5. ஏட்டில் இல்லாத இலக்கியம் – ஔவை துரைசாமி

KAHE

## 1. வெள்ளைவாரணர்

வெள்ளைவாரணர் தஞ்சை மாவட்டம் குடந்தை வட்டம் திருநாகேசுவரத்தில் 1917இல் பிறந்தார். இவரது பெற்றோர் அமிர்தம் அம்மையார், கந்தசாமி முத யார் ஆவர். வெள்ளைவாரணர் 1934 முதல் 1979 வரை அண்ணமாலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் பணியாற்றிப் பெரும்புகழ் பெற்றார். தமிழகப் பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் பாடத்திட்டக்குழு, தேர்வுக்குழு, ஆளவை, ஆட்சிக்குழு உறுப்பினராய்த் திகழ்ந்தவர். தமிழகப் புலவர் குழுவின் உறுப்பினராகவும், பண்ணாராய்ச்சிக் குழுவின் உறுப்பினராகவும் விளங்கிய பெருமைக்குரியவர். வெள்ளைவாரணர் தொல்காப்பியம், சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம் எனத் தமிழின் அனைத்துத் துறைகளிலும் புலமை வாய்ந்த பேரறிஞர். இவர் இயற்றிய நூல் காக்கை விடுதூது காக்கையைத் தூதாக அனுப்புவது மரபில்லை. இருப்பினும், இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்குதல் என்ற கொள்கையினை எதிர்த்து தமது வெறுப்பினைக் காட்டுவதற்காகவும், தமிழ்மொழியின் தொன்மையினை நிலைநாட்டுவதற்காகவும் காக்கையைத் தூதாகத் தேர்ந்தெடுத்து காக்கைவிடு தூது படைத்துள்ளார். சங்ககாலத் தமிழ்மக்கள், குறிஞ்சிப் பாட்டாராய்ச்சி, தமிழிலக்கிய வரலாறு, (தொல்காப்பியம்), தொல்காப்பியம் நன்னூல் எழுத்ததிகாரம் ஒப்பீடு, சொல்லதிகாரம் ஒப்பீடு, சேக்கிழார் நூல்நயம், பன்னிரு திருமுறை வரலாறு, தில்லைப் பெருங்கோயில் வரலாறு, திருவருட் பாச சிந்தனை, இசைத்தமிழ், திருத்தொண்டர் வரலாறு, தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு, சைவ சித்தாந்த சாத்திர வரலாறு ஆகிய திறனாய்வு நூல்களையும் எழுதியுள்ளார். இவற்றுள் பன்னிரு திருமுறை வரலாறும், திருவருட்பா சிந்தனையும் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக் கழக முதல் பரிசினைப் பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. 16.2.15. பதிப்பித்த நூல்கள் வெள்ளைவாரணர், பரதசங்கிரகம், கம்பராமாயணச் செம்பதிப்பு எனும் இரு நூல்களையும் பதிப்பித்துள்ளார்.

## 2. வ.சுப. மாணிக்கம்

சிறந்த தமிழறிஞர், கவிஞர், பேச்சாளர், நாடகாசிரியர், ஆய்வாளர், உரையாசிரியர் என பன்முகப் பரிமாணம் கொண்ட வ.சுப. மாணிக்கம் (V.S. Manickam) புதுக்கோட்டை மாவட்டம் மேலைச் சிவபுரியில் (1917) பிறந்தார். இயற்பெயர் அண்ணாமலை. இளம் பருவத்திலேயே பெற்றோரை இழந்தார். தாய்வழிப் பாட்டி, தாத்தாவிடம் வளர்ந்தார். 7 வயது வரை நடேச ஐயரிடம் குருகுலக் கல்வி கற்றார். வணிகம் பழக 11 வயதில் பர்மா சென்றார். பொய் சொல்லுமாறு முதலாளி கூறியதை ஏற்க மறுத்தவர், வேலையை இழந்து 18 வயதில் தமிழகம் திரும்பினார். பண்டிதமணி கதிரேசன் செட்டியார் உதவியுடன் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் சேர்ந்து =வித்வான்+ பட்டம் பெற்றார். சென்னை பல்கலைக்கழகத்தில் பிஓஎல். முதுகலை பட்டம் பெற்றார். =தமிழில் வினைச்சொற்கள்+ என்ற பொருளில் ஆய்வு செய்து எம்ஓஎல் பட்டமும், =தமிழில் அகத்திணைக் கொள்கைகள்+ என்ற பொருளில் ஆய்வு செய்து முனைவர் பட்டமும் பெற்றார். காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பணியில் சேர்ந்தார். 1964 முதல் 1970 வரை அதன் முதல்வராகப் பணியாற்றினார். பின்பு அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் 7 ஆண்டுகளுக்கு மேல் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் துணைவேந்தராக 1979 முதல் 1982 வரை பணியாற்றினார். தமிழில் பல புதிய சொல்லாக்கங்களை தந்தவர். மூதறிஞர், செம்மல், முதுபெரும் புலவர், பெருந்தமிழ்க் காவலர் என்றெல்லாம் போற்றப்படும் வ.சுப. மாணிக்கம் 1989 ஏப்ரல் 25ம் தேதி 72வது வயதில் மறைந்தார்.

## 3. முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்

முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. (பிறப்பு நவம்பர் 11, 1899 டிசம்பர் 19, 1994 மறைவு) திருச்சியை சேர்ந்தவர். தமிழ் உணர்வாளர். நீதிக்கட்சி உறுப்பினராக பிராமணரல்லாதோர் முன்னேற்றத்திற்காகவும் தமிழ்மொழியின் உயர்விற் காகவும் பாடுபட்டவர். துவக்கத்தில் பெரியாருடன் இணைந்து இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட போதும் அவரது திராவிடநாடு கோரிக்கையுடன் உடன்படாதவர். அது தமிழரின் தனித்தன்மையை நீர்த்துவிடும் என எண்ணினார். இவர் எழுதியுள்ள 23 நூல்களும் தமிழ்வளர்ச்சித் துறையால் 20072008இல் நாட்டுடைமையாக்கப்பட்டது. 1893ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் தேதி பெரியண்ண பிள்ளை சுப்புலட்சுமி அம்மையார் அவர்களுக்கு புதல்வனாய்ப் பிறந்தார். தமிழ் இலக்கண கடலான இவர் பள்ளிக்குச் சென்றதில்லை. ஐந்தாவது வயதில் முத்துச்சாமிக் கோனாரிடம் மண ல் தமிழ் எழுத்துக்களை எழுதிப் பயிற்சி பெற்றார். நாவலர் வேங்கடசாமி நாட்டார், மறைமலையடிகள், திரு.வி.க, நாவலர், சோமசுந்தர பாரதியார் முத ய தமிழறிஞர்கள் தொடர்பால் தாமாக முயன்று தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுப் புலமை பெற்றார். முதல் இந்தி எதிர்ப்புப் போரில் (1938) தந்தை பெரியாரோடும், தமிழறிஞர்களோடும் கைகோத்துப் போராடிய முதன்மைப் போராளியே கி.ஆ.பெ. விசுவநாதம். 1965 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போரில் மக்களைத் தூண்டியதாகக் கூறி இரண்டு மாதம் சிறையிலடைக்கப் பட்டார். இவருக்கு 1956ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்கம் ==முத்தமிழ்க் காவலர்++ விருது வழங்கியது.

## 4. ரா.பி. சேதுப்பிள்ளை

ரா.பி. சேதுப்பிள்ளை (மார்ச் 2, 1896 ஏப்ரல் 25, 1961 திருநெல்வே யில் இராசவல் புரம் என்ற ஊரில் 1896 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 2ஆம் நாள் பிறவிப்பெருமான்பிள்ளை சொர்ணம்மாள் ஆகியோருக்கு மகவாகப் பிறந்தார். சேதுக்கடலாடி இராமேசுவரத்திலுள்ள இறைவனைப் பூசித்ததனால் பிறந்த தம் மகனுக்கு சேது என்று பெயர் சூட்டினர். இரா.பி. சேதுப்பிள்ளையின் முன்னெழுத்துக்களாக அமைந்த =இரா+ என்பது இராசவல் புரத்தையும், =பி+ என்பது =பிறவிப்பெருமான்பிள்ளை+ அவர்களையும் குறிப்பன. 25 ஆண்டுக் காலம் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய சேதுப்பிள்ளை தம் எழுத்தாலும் பேச்சாலும் தமிழுக்குப் பெருமையும் தமிழ் உரைநடைக்குச் சிறப்பையும் சேர்த்தார். இரா.பி. சேதுப்பிள்ளையின் உரைநடை நூல்கள் இருபதுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் அடங்குவன. பதினான்கு கட்டுரை நூல்கள் மூன்று வாழ்க்கை வரலாற்று நூல்கள் எழுதியுள்ளார். இவர் எழுதிய முதல் கட்டுரை நூல் ==திருவள்ளுவர் நூல் நயம்++ என்பதாகும். படைத்த உரைநடை நூல்களுள் தலைசிறந்ததாகவும் வாழ்க்கைப் பெருநூலாகவும் விளங்குவது, ==தமிழகம் ஊரும் பேரும்++ என்பதாகும். இந்நூல் அவரின் முதிர்ந்த ஆராய்ச்சிப் பெருநூலாகவும், ஒப்பற்ற ஆராய்ச்சிக் கருவூலமாகவும் திகழ்கிறது. சேதுப் பிள்ளையின் =தமிழின்பம்+ என்னும் நூலுக்கு இந்திய அரசு அளிக்கும் சாகித்ய அகாதமியின் பரிசு வழங்கப்பட்டது. கவியோகி எனப் போற்றப்படும் சுத்தானந்த பாரதியார் இரா.பி. சேதுப்பிள்ளையைச் ==செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை++ என்று அழைத்துப் பாராட்டினார். அடுக்குமொழி, எதுகை, மோனை, இலக்கியத் தொடர் மூன்றையும் உரைநடைக்குள் கொண்டு வந்த சேதுப்பிள்ளையின் பேச்சாற்றலைப் பாராட்டித் தருமபுர ஆதீனம் 1950ஆம் ஆண்டு =சொல் ன் செல்வர்+ என்னும் விருது வழங்கியது. சேதுப்பிள்ளையின் நடை ஆங்கில அறிஞர் ஹட்சனின் நடையைப் போன்றது என்று சோமலே பாராட்டுவார். இவர் தமிழுக்கு ஆற்றிய பணிகளுக்காகச் சென்னைப் பல்கலைக் கழகம் =முனைவர்+ பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. சேதுப்பிள்ளை ஏப்ரல் 25, 1961இல் தம் 65ஆம் வயதில் இறந்தார். இவருடைய நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள**).**

## 5. ஔவை துரைசாமி

ஔவை துரைசாமி (செப்டம்பர் 5, 1903 ஏப்ரல் 3, 1981) தமிழறிஞர். தமிழ்மொழி மே ருந்த பற்றுத ன் காரணமாகத் தான் பார்த்து வந்த உடல்நலத் தூய்மைக் கண்காணிப்பாளர் பணியில் இருந்து விலகி; அதன்பின் தமிழ் கற்றுத் தமிழறிஞராக உயர்ந்த பெருமைக்குரியவர். விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்திற்கு அருகில் உள்ள ஔவையார் குப்பம் என்னும் சிற்றூரில் சுந்தரம் பிள்ளை சந்திரமதி தம்பதிக்கு மகனாக 1903 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் நாள் பிறந்தார். கரந்தைத் தமிழ்ச்சங்கப் பள்ளியில் தமிழ்வேள் உமாமகேசுவரனால் ஆசிரியராகப் பணியமர்த்தப்பட்டார். தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ் முத ய இதழ்களில் தமிழ் இலக்கிய, இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதினார். 1942 இல் திருப்பதி திருவேங்கடவன் கீழ்த்திசைக் கல்லூரியில் ஆராய்ச்சியாளராகப் பணியில் சேர்ந்தார். 1943 முதல் எட்டு ஆண்டுகளுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறையில், விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1951இல் மதுரை தியாகராசர் கல்லூரியில் பேராசிரியராகச் சேர்ந்தார். மணிமேகலைக் காப்பியத்திற்குப் புத்துரை எழுதும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் திடீரென்று இயற்கை எய்தி விட்டதை அடுத்து, ==கரந்தை கவியரசு++ வேங்கடாசலம் பிள்ளையின் விருப்பத்திற்கிணங்க, மணிமேகலைக் காப்பியத்தின் இறுதி நான்கு காதைகளுக்கும் விளக்கவுரை எழுதிக் கொடுத்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் போது, சைவ சமய இலக்கிய வரலாறு, ஞானாமிர்தம் போன்ற அரிய நூல்களை எழுதினார். அந்நூல்கள் பல்கலைக் கழகத்தின் வெளியீடுகளாக வெளியிடப்பட்டன.

# UNIT-4

***பகுதி – ஆ***

***சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக:***

1. வெள்ளைவாராணர் இயற்றிய கட்டுரையின் பெயர் என்ன?
   (அ). கலைச்சிறப்பு (ஆ). தமிழிசை இயக்கம் (இ). தனிப்பாடல் (ஈ). ஏட்டில் இல்லாத இலக்கியம்
2. நடேச ஐயரிடம் குருகுலக் கல்வி கற்றவர் யார்?
   (அ). வெள்ளைவாராணர் (ஆ).வ.சுப. மாணிக்கம் (இ). ஔவை துரைசாமி (ஈ). சேதுப்பிள்ளை
3. முத்தமிழ் காவலர் என்று யாரைக் குறிப்பிடுகிறோம்?
   (அ). அண்ணா (ஆ) விசுவநாதம் (இ). பிரபஞ்சன் (ஈ). சங்கரலிங்கம்
4. இரா.பி. சேதுப்பிள்ளை பிறந்த ஆண்டு எது?
   (அ). 1891 (ஆ). 1893 (இ). 1895 (ஈ). 1896
5. திருநெல்வேலியில் உள்ள இராசவல்லிபுரம் என்ற ஊரில் பிறந்தவர் யார்?
   (அ). விசுவநாதம் (ஆ). ஔவை துரைசாமி (இ). சேதுப்பிள்ளை (ஈ). சங்கரலிங்கம்
6. “ஏட்டில் இல்லாத இலக்கியம்” என்னும் கட்டுரையின் ஆசிரியர் யார்?
   (அ). சங்கரலிங்கம் (ஆ). சங்கரலிங்கம் (இ). ஔவை துரைசாமி (ஈ). சேதுப்பிள்ளை
7. வெள்ளைவாரணர் என்பதன் பொருள் என்ன?
   (அ) இந்திரன் (ஆ) பிரகஷ்பதி (இ) சிவன் (ஈ) விஷ்ணு
8. 1943 ஆம் ஆண்டு தமிழிசைச் சங்கம் தமிழகத்தில் எங்கு நிறுவப்பட்டது?
   (அ) சென்னை (ஆ) மதுரை (இ) நெல்லை (ஈ) திருச்சி
9. பெருந்தமிழ்க் காவலர் என்று போற்றப்படுபவர் யார்?
   (அ) சிவப்பிரகாசர் (ஆ) வ.சுப.மாணிக்கம் (இ) ரா.பி.சேதுப்பிள்ளை (ஈ) வெள்ளைவாரணர்
10. ‘காளத்தி வேடன்’ என்பவன் ______________.
    (அ) குகன் (ஆ) சுக்ரீவன் (இ) கண்ணப்பன் (ஈ) சடாயு
11. குலோத்துங்க சோழனின் அவைக்களப் புலவர் யார்?
    (அ). ஒட்டக்கூத்தர் (ஆ). பாரதியார் (இ). தண்டபாணி சுவாமிகள் (ஈ). குமரகுருபரர்
12. காக்கைவிடு தூது என்ற நூலின் ஆசிரியர் யார்?
    (அ). வேதநாயகம்பிள்ளை (ஆ). வெள்ளைவாரணர் (இ). சுரதா (ஈ). குமரகுருபரர்
13. சாகித்ய அகாதமியின் பரிசுபெற்ற ரா.பி.சேதுபிள்ளையின் நூல் எது?
    (அ). தமிழின் இனிமை (ஆ). ஆசியஜோதி (இ). வாழ்க்கை (ஈ). தமிழின்பம்
14. பால்வீதி என்ற கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் யார்?
    (அ). மேத்தா (ஆ). பாரதியார் (இ). கவிமணி (ஈ). அப்துல்ரகுமான்

## *பகுதி – ஆ*

***அனைத்து வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளி:***

1. “கலைச்சிறப்பு” என்னும் கட்டுரையின் மையக்கருத்தைச் சுட்டுக.
2. பொருள் பற்றி வழங்கும் பழமொழிகள் இரண்டினை எழுதிவிளக்கம் தருக.
3. பேரா.க. வெள்ளைவாரணரின் நூல்களைப் பட்டியலிடுக.

## *பகுதி – இ*

***பெருவினாக்கள்: அனைத்து வினாக்களுக்கும் விடையளி:***

1. “தமிழிசை இயக்கம் ” கட்டுரையின் மையக் கருத்தை விவரி.
2. கலைகளின் சிறப்பை விசுவநாதம் அவர்களின் கட்டுரையின் வழி நின்று விளக்குக.
3. அக்கால புலவர்களின் தமிழ்புலமையை சில தனிப்பாடல்களை எடுத்துக்காட்டி விளக்குக?
4. நும் பாடப்பகுதியில் இடம்பெற்ற நாட்டுப்புற இலக்கியங்களின் தனித்தன்மைகளைத் தொகுத்தெழுதுக.
5. காளத்திவேடனும் கங்கை வேடனும் என்னும் கட்டுரையைத் தொகுத்தெழுதுக.
6. ஏட்டில் இல்லாத இலக்கியம் என்னும் கட்டுரையைத் திறனாய்வு செய்க.

**UNIT-V**

**SYLLABUS**

| மொழிப்பயிற்சி – Creative writing practices – Self study |
|---|

## மொழிப்பயிற்சி

படைப்பிலக்கியப் பயிற்சிகள் (கதை, கவிதை,கட்டுரை, உரைநடை எழுதுதல்) மொழிபெயர்ப்பு

**பாட நூல்: கற்பகச்சோலை – தமிழ் ஏடு.**
கற்பகம் உயர்கல்வி கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.

## இன்றியமையாத வினாக்கள்

## பெரு வினாக்கள்

1. விடியல்'- என்னும் தலைப்பில் பத்து வரிகளுக்கு குறையாது கவிதை எழுதுக.
2. "இந்தியச் சமூகமும் இளைஞர்களும்" என்னும் தலைப்பில் இரண்டு பக்கங்களுக்குக் குறையாது கட்டுரை வரைக.
3. தன்னம்பிக்கை எனும் தலைப்பில் கவிதை எழுதுக.
4. தமிழ் இலக்கியங்களில் அகமும் புறமும் எனும் தலைப்பில் கட்டுரை வரைக
5. தன்னம்பிக்கை எனும் தலைப்பில் கவிதை எழுதுக.
6. 'தமிழர்களின் கலாச்சாரமும் பண்பாடும்' எனும் தலைப்பில் கட்டுரை வரைக. (அல்லது)
7. 'சுற்றுச்சூழலும் நீர்வளமும்' குறித்துக் கட்டுரை எழுதுக.

**கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்** 19LAU101

**கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்** *(For Arts Students)*

**தமிழ்த்துறை**

**முதலாம் பருவம்: முதல் இடைத்தேர்வு** *நாள்:*

*நேரம்: 2 மணி* *மொத்த மதிப்பெண்கள்:50*

*பகுதி: அ: ஒரு மதிப்பெண் வினாக்கள்* **(20X1=20)**

1. 'யோகசித்தி' கவிதையின் ஆசிரியர் யார்?.
   (அ). பாரதிதாசன் **(ஆ). பாரதியார்** (இ). கவிமணி (ஈ). அப்துல்ரகுமான்
2. பாரதியாரின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்ட ஆண்டு ________.
   (அ). 1942 (ஆ). 1943 (இ).1945 **(ஈ). 1949**
3. 'புரட்சிக்கவிஞர்' என்ற பட்டம் பெற்றவர் __________.
   (அ). கவிமணி (ஆ). பாரதியார் **(இ). பாரதிதாசன்** (ஈ). அப்துல்ரகுமான்
4. 'குயில்' - கவிதை இதழின் ஆசிரியர் யார்?.
   **(அ). பாரதிதாசன்** (ஆ). அப்துல்ரகுமான் (இ). கவிமணி (ஈ). பாரதியார்
5. 'மதி' என்பதன் பொருள் ____________.
   (அ). புகழ் (ஆ). செல்வம் **(இ). அறிவு** (ஈ). வீரம்
6. 'பெண்ணே உனக்காக' - கவிதையின் ஆசிரியர் யார்?.
   (அ). சுகிர்தராணி (ஆ). சுகந்தி (இ). தாமரை **(ஈ). நர்மதா**
7. 'பரிதி' என்பதன் பொருள் _____________?.
   (அ). மலை (ஆ). நிலவு (இ). வானம் **(ஈ). சூரியன்**
8. 'கவிக்கோ' பட்டம் பெற்ற கவிஞர் யார்?.
   (அ). கவிமணி (ஆ). பாரதியார் (இ). சிற்பி **(ஈ). அப்துல்ரகுமான்**
9. 'குறிஞ்சி' என்பதன் நில அமைப்பு__________________.
   **(அ). மலை** (ஆ). காடு (இ). கடல் (ஈ). வயல்
10. 'வேனில் காலம்' என்பது, எந்தப் பருவத்தைக் குறிக்கிறது?.
   (அ). மழைக்காலம் **(ஆ). வெயில் காலம்** (இ). இலையுதிர் காலம் (ஈ). பனி காலம்
11. 'வானம்பாடி' இயக்கக் கவிஞர் ___________.
   (அ). பாரதியார் (ஆ). பாரதிதாசன் (இ). நர்மதா **(ஈ). அப்துல்ரகுமான்**
12. 'ஆலாபனை' கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் ___________.
   (அ). பாரதிதாசன் **(ஆ). அப்துல்ரகுமான்** (இ). கவிமணி (ஈ). பாரதியார்
13. திருக்குறளின் பொருட்பாலில் அமைந்த அதிகாரங்கள் __________.
   (அ). 68 **(ஆ). 70** (இ). 69 (ஈ). 25
14. திருக்குறளில் 'பண்புடைமை' எத்தனையாவது அதிகாரமாக இடம்பெற்றுள்ளது?.
   (அ). 99 **(ஆ).100** (இ). 50 (ஈ).108
15. 'ஞானக்குறள்' என்ற நூலின் ஆசிரியர் யார்?.
   (அ). திருவள்ளுவர் **(ஆ). ஔவையார்** (இ). என்னயினாப் புலவர் (ஈ). குமரகுருபரர்

16. சிற்றிலக்கியங்களின் வகைகள்______________.

(அ). 94 **(ஆ). 96** (இ). 98 (ஈ). 89

17. முக்கூடற்பள்ளு இலக்கியத்தின் காலம் எது?.

**(அ). கி.பி. 1680** (ஆ). கி.பி. 1880 (இ). கி.பி. 1860 (ஈ). கி.பி. 1068

18. தமிழிசை வளர்ச்சிக்குத் தொண்டு செய்த பல்கலைக்கழகம்________________________.

**(அ). அண்ணாமலைப் பல்கலைக்கழகம்** (ஆ). பாரதியார் பல்கலைக்கழகம்

(இ). சுந்தரனார் பல்கலைக்கழகம் (ஈ). திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

19. சங்கம் அமைத்துத் தமிழிசையை வளர்த்தவர்கள் __________.

(அ). களப்பிரர் **(ஆ). பாண்டியர்** (இ). சேரர் (ஈ). சோழர்

20. 'காக்கைவிடு தூது' நூலின் ஆசிரியர்___________.

(அ). பாரதியார் (ஆ). பாரதிதாசன் **(இ).வெள்ளைவாரணர்** (ஈ). கவிமணி

## பகுதி: ஆ - இரு மதிப்பெண் வினாக்கள் (3X2=6)

***அனைத்து வினாக்களுக்கும், ஐந்து அல்லது ஆறு வரிகளில் மட்டும் விடையளி.***

**21. 'பாவேந்தர் பாரதிதாசன்' – குறிப்புவரைக.**

**பாரதிதாசன்** (*Bharathidasan*, ஏப்ரல் 29, 1891 - ஏப்ரல் 21, 1964)பாண்டிச்சேரியில் (புதுச்சேரியில்) பிறந்து பெரும் புகழ் படைத்த பாவலர் ஆவார். இவருடைய இயற்பெயர் சுப்புரத்தினம் ஆகும். தமிழாசிரியராக பணியாற்றிய இவர்,சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால் பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக்கொண்டார். பாரதிதாசன் தம் எழுச்சி மிக்க எழுத்தால் **புரட்சிக் கவிஞர்** என்றும் **பாவேந்தர்** என்றும் பரவலாக அழைக்கப்படுபவர். இவர் குயில் என்னும் கவிதை வடிவில் ஒரு திங்களிதழை நடத்தி வந்தார். எழுத்தாளரும் திரைப்படக் கதாசிரியரும் பெரும் கவிஞருமான பாரதிதாசன் அரசியலிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராக 1954 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். 1946, சூலை 29இல் அறிஞர் அண்ணாவால், கவிஞர் 'புரட்சிக்கவி" என்று பாராட்டப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். கவிஞருடைய படைப்பான "பிசிராந்தையார்" என்ற நாடக நூலுக்கு 1969 இல் சாகித்ய அகாடமியின் விருது கிடைத்தது. இவருடைய படைப்புகள்தமிழ்நாடு அரசினரால் 1990 இல் பொது உடைமையாக்கப்பட்டன.

**22. 'ஏவா மக்கள் மூவா மருந்து' - பொருள் விளக்கம் தருக.**

பெற்றோர் கட்டளை இடுவதற்கு முன்பாகவே, அவர்களின் குறிப்பறிந்து நடக்கின்ற பிள்ளைகள், அவர்களது முதுமையையும், இறப்பையும் மாற்றுகின்கின்ற அமுதம் போன்றவர்கள்.

**23. 'வழக்கு' என்று நிறைவடைகின்ற திருக்குறளின் பொருளைச் சுட்டுக?.**

எல்லோரிடத்திலும் எளிமையாகப் பேசுவதும், நடப்பதும், எளியவராகத் தம்மை வெளிப்படுத்திக்கொள்வதும் பண்புடையவரின் அடையாளமாகும்.

## பகுதி: இ - பெரு வினாக்கள் (4X6=24)

***அனைத்து வினாக்களுக்கும், முன்னுரை மற்றும் முடிவுரை எழுதி விடையளிக்கவும்.***

**24. 'யோகசித்தி' என்றமைந்த கவிதைப் பொருளை விவரி.**

**முன்னுரை** பாட்டுப்புலவன் பாரதி தன்னுடைய கவித்திறத்தால் இவ்வையத்தை பாலித்திட நினைத்தவர். தன்னுடைய கவிதைகளின் மையமாக மக்களையும், நாட்டையும் மட்டுமே கொண்டிருந்வர். யோகசித்தி என்ற அவரது பாடப்பகுதி கவிதயில் எதிர் காலத்தில் நாடு பெறவேண்டிய நலன்களையும், சிறப்புக்களையும் அருளச் சொல்லி தேவியை வேண்டி நிற்பதோடு அவ்வளம் மிகுந்து நாட்டிற்குத் தாம் தலைவனாக இருக்கவேண்டும் என்ற தன்னுடைய விருப்பத்தையும் பதிவு செய்கிறார் எனலாம்.

**இயல்பான மனிதனின் செயல்**

நாள்தோறும் உணவினை விரும்பி உண்டு, பல்வேறு கதைகள் பேசி அதன்மூலம் மனவேதனை உற்று, துன்பத்தில் வாடி வாழ்கின்றனர். மேலும் பிறரையும் வேதனையுறச் செய்து தலைமுடி வெளுத்துப் போகும் மூத்த வயதில் கொடியவனாகிய எமனுக்கு இரையாகின்றனர். இத்தயைக அற்ப மனிதரைப் போல நான் வீழ்வேன் என்று எண்ணினாயோ என வினவுகிறார்.

**தேவியிடம் வேண்டல்**

தேவியிடம் பாரதியார், '' உன்னிடம் சில வரங்கள் கேட்பேன்'' என வேண்டுகிறார். நாளையும் நேற்றும் உண்மையல்ல என்பதை உணர்ந்த பாரதியார், அவ்வரங்களை இன்றே வேண்டுமென வேண்டுகிறார். அவர், முந்தைய பிறவிகளின் வினைகள் யாவும் அழிந்திட வேண்டும் என்றும், இன்று முதல் புதிய உயிராகத் தம்மைப் படைத்திட வேண்டும் என்றும் கேட்கிறார். மேலும் எவ்விதக் கவலையும் இன்றி இருக்கச் செய்து, அறிவினைத் தூயதாக்கி என்றும் மகிழ்ச்சியுறச் செய்ய வேண்டும் என்கிறார்.

**உடல் வலிமை வேண்டும்**

பாரதி, தமக்குச் செம்மையான உடல்நலம் வேண்டிப் பாடுகையில், தன் தோள்களை மிகுந்த ஊறுதிபடச் செய்து, உடலின் சோர்வையும், நோய்களையும் போக்க வேண்டுகிறார். கூரிய அரிவாளால் தன் உடலைப் பிளக்கும் போதும் வலிமை குறையாத உறுதியைக் கேட்கிறார். ஒளிச்சுடர் போன்ற புத்தம் புதிய நாள் தோன்றியவுடன் மலரும் மலர் போல, ஒளிபொருந்திய முகம் தரவேண்டும் அத்தோடு வீடுபேறடைய மிகப் பெரும் தடையாக விளங்கும் காமமாகிய மன்மதனை வெல்லும் திறல் வேண்டும் என்கிறார்.

**தொழில் வளம் வேண்டல்**

நினைக்கின்ற காரியங்கள் யாவும் வெற்றிபெற வேண்டும் என்கிறார். மேலும் தொழில் செய்யத் தேவையான பெரும்பணம் வேண்டும் என்கிறார். ஈமலும் தொழில் செய்யத்தேவையான பெரும் பணம் வேண்டும் என்கிறார். அதில் பல்வேறு மக்களும் துணைபுரியவும், வேலையோடு அலுப்பின்றி இருக்க, நல்ல தாளம் பொருந்திய பாட்டுக்கள் மனதல் நிறைய வேண்டும் என்றும், மேலும் அப்பாடல்களால் கோடிக்கணக்கான பல இன்பங்கள் எய்திட, தானும் பாடும் திறன் அடைய வேண்டும் என்கிறார்

**சித்திகள் வேண்டல்**

பாரதியார், கருங்கல்லை வைரமாக மாற்றுதல், செம்பைப் பொன்னாக்குதல், சாதாரணப் புல்லை நெல்லாக்குதல், அற்பமான பன்றியை வீரமிக்க சிங்கமாக மாற்றுதல், சுவையற்ற மண்ணை தித்திக்கும் வெல்லமாக்கல் ஆகிய அபூர்வ சித்துகளினால் அனைவரையும் வியப்புறச் செய்ய வேண்டும். இந்த நாட்டின் துன்பத்தைத் தீர்க்கும் திறமும், கல்வி, வெற்றியைத் தேடித்தரும் அறிவுடன் இயைந்த வீரமும் வேண்டுகிறார்.

**தீயவையைத் தாங்கும் திறன் வேண்டுதல்**

குவிந்து கிடக்கும் செல்வங்கள், அறிவுத் திறம் சார்ந்த பல்வகைத் தொழில்கள் என அனைத்தும் இந்நாட்டில் சிறந்து விளங்க, மற்றவர் இந்நாட்டின் புகழ் பாட, தீயதைச் சாடும் திறனைத் தரவேண்டும் என்கிறார்.மேலும் என்னுள் ஏற்பட்டிருக்கும் அறியாமையை விலக்கி எவற்றையும் எதிர்க் கொள்ளும் பலனைத் தரவேண்டும், இவையனைத்தும் அரிதினும் அரிதெனினும் , தாயாகிய உனக்கு இவை மிகவும் எளிதன்றோ என்கிறார்.

**சக்தி தர வேண்டுதல்**

அறிவினை அழிக்கும் பொய்யாகிய இருள் தன்னைவிட்டு முழுமையாக நீங்க வேண்டும் என்றும், அற்ப பயம் தம்மைவிட்டு விலக வேண்டும் என்றும் வரம் கேட்கிறார். மேலும் இதை மெல்லச் சொல்வதற்கு என்ன உள்ளது என்று வினவி, முந்தைய காலத்தில் பார்த்தனாகிய அர்ச்சுனனுக்கும், கண்ணனுக்கும் அருள் செய்தது போலே தம்மையும் அரவணைத்து அருளல் வேண்டும் என்கிறார்.

**முடிவுரை**

மேற்கூறப்பட்டுள்ள அனைத்தையும் உன்னிடம் வேண்டுகிறேன். உன்னால் இயலாதது எதுவுமில்லை, உன்னைக் கோடிமுறை தொழுதேன். இனி என்னை உலகின் தலைமகனாக்கி அருள்வாயாக! நின் அருள் வாழி! நீ வாழி! என்கிறார். இவ்வாறெல்லாம் பராசக்தியைத் தொழுவதன் மூலம் தன்னுடைய நாடு நலம் பெற்றுத் திகழ பாரதி வேண்டுகிறார்.

## 25. பண்புடைமையின் இன்றியமையாமையினைத் தொகுத்துரைக்க.

பெருமை முதலிய சிறந்த குணங்களிலிருந்து ஒருவன் வழுவாது நின்று எல்லோரது இயல்புகளையும் அறிந்து ஒத்து ஒழுகும் தன்மையே பண்பாகும். இப்பண்பினை விளக்குவதாக இவ்வதிகாரம் அமைந்துள்ளது.

### 1. பண்புடைமையை எய்துதல்

எல்லோரிடத்தும் எளிமையான தன்மையுடையவராதலின் பண்புடைமை என்னும் நன்னெறியை அடைவது எளிது என்று சொல்லுவர் அறநூலோர். குணங்களால் நிறைந்த தன்மை

உடையதாலும், உலகத்தைத் தன்பால் வசீகரிப்பதாலும், தொல்லோர் சென்ற நன்னெறி என்பதாலும் பண்புடைமையை அனைவரும் எளிதில் பின்பற்றி ஒழுகுதல் வேண்டும் என்பதற்காக நூலோர் இங்ஙனம் கூறுகின்றனர்.

### 2. பண்புடையராவதற்குரிய காரணம்

எல்லோரிடத்திலும் அன்புடையவனாய் இருத்தலும் அனைத்து நல் இலக்கணங்களும் உடைய குடியில் பிறந்தவருக்கு உரிய செயல்களை உடையவனாயிருத்தலும் ஆகிய இவ்விரண்டும் பண்புடைமை என்னும் நன்னெறி ஆகும்.

### 3. நன்மக்கட் பண்பு உடையவனாதல்

உயிரோடு பொருந்தாத உடம்பால் ஒத்திருத்தலால் ஒருவன் நன்மக்களுக்கு ஒப்பாக மாட்டான். பொருத்தமான பண்பால் ஒத்திருத்தலே பொருந்துதற்குரிய ஒப்பாகும். எனவே நன்மக்களோடு பெறப்படும் ஒப்பாவது உடம்பினால் ஒத்தல் அன்று.

### 4. பண்புடைமை பாராட்டப்படும்

நீதியையும் அறத்தையும் விரும்புதலும் எல்லோருக்கும் பயன்படுதலுமாகிய நல்லோரினது உயர்ந்த பண்புகளை இவ்வுலகத்தோர் கொண்டாடுவர். எனவே உயர்ந்த பண்புகளைக் கடைபிடித்து ஒழுகுதல் வேண்டும்.

### 5. பண்புடையாரின் சிறப்பு

ஒருவரை விளையாட்டாகப் பழித்துப் பேசுதலும் பேசுபவருக்கு அது துன்பத்தை விளைவிக்கும். ஆதலால், பிறரது இன்ப, துன்பங்களையும் இயல்புகளையும் அறிந்து நடக்கக்கூடிய பண்புடையாரிடத்தில் பகைமை உள்ளபோதும், பண்புகளே காணப்படும். பண்புடையார், இவை இன்னாதவை என்பதை முன்னமேயே அறிந்தவராவார். எனவே அவற்றை ஒருபோதும் செய்ய மாட்டார். இனியவற்றையே செய்வார்.

### 6. பண்புடையாரின் உயர்ச்சி

பண்புடையாரைச் சார்ந்து அமைந்திருப்பதால் உலகம் இடையறாது இயங்கி வருகிறது. அவ்வாறு சார்ந்து இல்லையாயின் உலகமானது மண்ணுள் புகுந்து மறைந்து போகும். எனவே உலகியல் நிலைத்து இயங்குவதற்கு அனைவரும் பண்புடைமையைச் சார்ந்து ஒழுகுதல் வேண்டும்.

### 7. அறிவின் பயனானது மக்கட்பண்பு

நன்மக்கட்கே உரிய நற்பண்பு இல்லாதவர். அரத்தின் கூர்மை போலும் கூரிய அறிவுடையராக இருந்தாலும் ஓரறிவுடைய மரத்திற்கு ஒப்பாகக் கருதப்படுவர். அறிவிற்குப் பயனான மக்கட் பண்பு இல்லையாயின் அறிவும் இல்லாதவர் என்றே கருதப்படுவர்.

### 8. பண்புடையாருக்கு இழுக்காதல்

தம்மோடு நட்பு கொள்ளாது பகைமையே செய்தொழுகுபவர் இடத்திலும் தாம் பண்புடையராக நடந்து கொள்ளாமை அறிவுடையார்க்கு இழுக்காகும். எனவே எத்தகைய தன்மை உடையவருடனும் பகைமை பாராட்டாது பழகுதல் பண்புடைமை ஆகும்.

### 9. பண்பின்மையின் குற்றம்

பண்பின்மையால் ஒருவரோடும் கலந்து உரையாடி மகிழும் தன்மை அறியாதவற்கு மிகப் பெரிய உலகமானது பகல்பொழுதிலும் இருள் நிறைந்து காணப்படும். எனவே எல்லோரோடும் கலந்து பழகும் தன்மை அறியாததால் பண்பில்லாதவர்க்கு உலகியல் தெரியாது என்பது பொருளாகும். எனவே அனைவரோடும் கலந்து மகிழ்தலே பண்புடைமையாகும்.

### 10. பண்பில்லாரின் கேடு

பண்பில்லாதவன் தன் முன்வினையால் பெற்ற பெருஞ்செல்வமானது ஒருவருக்கும் பயன்படாது கெடும் என்பது, நல்ல பசுவின் பாலானது வைத்த கலத்தின் குற்றத்தால் சுவையின்றி

கெட்டதைப் போன்றதாகும். உலகின் எல்லாப் பயனையும் பெறுதற்குக் காரணமானது பெருஞ்செல்வம். அப்பெருஞ்செல்வம் பண்பில்லாதவர்க்கும் பிறருக்கும் பயன்படாது போகும்.

**26. பள்ளு இலக்கியத்தில் சுட்டப்படுகின்ற, நெல் மற்றும் மீன் வகைகளைப் பட்டியலிடுக.**

**நெல் வகைகள்:** சித்திரக் காலிவாலான், சிறைமீட்டான், மணல்வாரி, செஞ்சம்பா, கருஞ்சூரை, சீரகச்சம்பா, முத்து விளங்கி, மலைமுண்டன், பொற்பாளை, நெடுமூக்கன், அரிக்கிராவி, மூங்கிற் சம்பா, கத்தூரி, வாணான், கடைக்கழுத்தன், இரங்கள் மீட்டான், கல்லுண்டை, பூம்பாளை, பாற்கடுக்கன், வெள்ளை, புத்தன், கருங்குறுவை, புனுகுச் சம்பா ஆகிய வித்து வகைகளையெல்லாம் இரண்டு பூவுக்கும் காணுமளவுக்குத் தொகுத்து விதைச் சேரில் போட்டிருக்கிறேன் பண்ணையாரே.

**மீன் வகைகள்:** குற்றாலத்தைத் தன்னிடத்தே கொண்ட திரிகூடமாகிய பெரிய மலை முகடுகளில், மேகங்கள் சென்று படிந்து பொழிந்து, மழை நீரானது ஒன்று சேர்ந்து, பொருநை நதியோடு சேர்தலை விரும்பி, முக்கூடற் பதியை வலங்கொண்டு வரும். நீர் வற்றுதல் இல்லாத மடுக்களில் பரவை, குரவை, வாளை, கோளை, தேளி, மயிந்தி, உழுவை, அயிந்தி, கூனி, மணலி, ஆறால், ஓராமீன், பிடிக்கவே முடியாத அயிரை, கெண்டை, கெளிறு, பெரிய வரால்கள் ஆகியவை பலவும் கிடைக்கும். அவை எல்லாம் புதுவெள்ளம் வரவும் எதிரேறிச் சென்று அணையிலே பாயும். அங்கிருந்து கால்வாய்களிலே பாயும். பின்னர், குளத்திலே பாய்ந்து வயல்களில் எல்லாம் பாயும். இத்தகைய வளமுடையது சிற்றாறு.

அது சிற்றாறு என்பதொரு பெயரினைப் பெற்றிருந்தாலும்கூட, ஒப்பற்ற சிறிய உருவத்தையுடைய வாமனரின் பெருமையைப் போல்வதாகும். பள்ளியர்களே! அந்தச் சித்திராநதி பெருகிவருகின்ற அழகினைப் பாருங்கள்.

**27. ‘தமிழிசை வளர்ச்சி’ என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**கட்டுரை: தமிழிசை இயக்கம், ஆசிரியர் – பேரா. க. வெள்ளைவாரணர்.**

1. கடைச்சங்க கால வளர்ச்சி-களப்பிரர் கால வளர்ச்சி-மதுரையில் பாண்டியர்கள் அமைத்த தமிழிசைச் சங்கம்.
2. கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதலாக, திருமுறை ஆசிரியர்கள் மற்றும் ஆழ்வார்களின் இசைத்தமிழ்ப் பங்களிப்பு. குடுமியான் மலை இசைக் கல்வெட்டுகள்.
3. கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல், கி.பி 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையில் இருந்த ஆதித்த சோழனின் இசைத்தொண்டு - திருமுறைகளை ஓதுவதற்கு நிவந்தங்கள்.
4. முதலாம் குலோத்துங்கனின் இசைத்தமிழ்ப் பணி - இசைத்தமிழ் நூல்.
5. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் இசைப் பணி – தமிழிசைக் கல்லூரி. தமிழிசைப்பாடல் நூல் பதிப்புகள்-வள்ளல் அண்ணாமலைச் செட்டியாரின் சென்னை தமிழிசைச் சங்கம், வள்ளல் முத்தைய செட்டியாரின் மதுரைச் தமிழிசைச் சங்கம்-ஆண்டுதோறும் பண்ணிசை ஆய்வு மாநாடுகள், விருதுகள்.

**கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்** *(For Arts Students)*

**தமிழ்த்துறை**

**முதலாம் *பருவம்: இரண்டாம் இடைத்தேர்வு*** *நாள்:*

***நேரம்: 2 மணி*** ***மொத்த மதிப்பெண்கள்:50***

***பகுதி: அ: ஒரு மதிப்பெண் வினாக்கள்*** ***(20X1=20)***

1. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் பிறந்த ஆண்டு எது?
   1876
2. எட்வர் ஆர்னால்டின் ஆசிய ஜோதி என்னும் நூலை மொழிபெயர்த்தவர் யார்?
   கவிமணி
3. விடியல் நேரத்தின் இயல்பை வெளிப்படுத்தும் கவிதை எது?
   விரல் மீட்டிய மழை
4. "கூரம்புகளாய் ஜன்னலுக்குள் சீறி வந்து விழுவது……………
   பேப்பர்
5. நாட்டின் சுவாசப் பையில் ஓட்டை போட்டது எது?
   ஊழல்
6. வேளாண்வேதம் என்று குறிப்பிடப்படுவது எந்த நூல்?
   நாலடியார்
7. " பால் உண் குருகு " –தொடரில் சுட்டப்படுகின்ற பறவை எது?
   அன்னப்பறவை
8. நாலடியாரின் ஆசிரியர் யார்?
   சமணமுனிவர்கள்
9. "நெடியது காண்கிலாய் நீ ஒளியை நெஞ்சே" என்ற பாடலின் ஆசிரியர் யார்?
   முன்றுறையரையனார்
10. நாலடியாருடன் நெருங்கிய தொடர்புடைய நூல் எது?
    பழமொழி நானூறு
11. தொண்டை நாட்டு மன்னின் சிறப்பினைக் கூறும் நூல் எது?
    கலம்பகம்
12. "செந்தமிழுக்குச் சேதுபிள்ளை" என்று அழைத்தவர் யார்?
    சுத்தானந்த பாரதியார்
13. கலம்பகத்தின் உறுப்புகள் எத்தனை?
    18
14. மதுரைசொக்கநாதர் தமிழ்விடு தூதின் ஆசிரியர் யார்?
    ஆசிரியர் இல்லை
15. 'காளத்தி வேடன்' என்பவன் ……………..
    கண்ணப்பன்

16. இரா.பி. சேதுப்பிள்ளை பிறந்த ஆண்டு எது?

1896

17. திருநெல்வேலியில் உள்ள இராசவல்லிபுரம் என்ற ஊரில் பிறந்தவர் யார்?

சேதுப்பிள்ளை

18. சாகித்ய அகாதமியின் பரிசுபெற்ற ரா.பி.சேதுபிள்ளையின் நூல் எது?

தமிழின்பம்

19. முதுமொழி என்பது ………………

பழமொழி

20. நாஷ்டா என்பதற்கு ஏற்றத் தமிழ்ச்சொல்…………….

சிற்றுண்டி

**பகுதி: ஆ - இரு மதிப்பெண் வினாக்கள்** (3X2=6)

***அனைத்து வினாக்களுக்கும், ஐந்து அல்லது ஆறு வரிகளில் மட்டும் விடையளி.***

**21. "வாழ்க்கைத் தத்துவங்கள்" கவிதையின் மையக் கருத்தைச் சுட்டுக.**

"நாமே நமக்குத் துணை யானால்
நாடும் பொருளும் நாற் புகளும்
தாமே நம்மைத் தேடிவரும்'' என்ற உலகியல் உண்மையை உரைக்கிறார் கவிமணி. எனவே பிற துணைகளை நம்பி வாழ வேண்டாம் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்தும் கவிமணி தன் கருத்தை வலுப்படுத்துவதற்காகச்
'சற்றும் இதற்கொர் ஐய முண்டோ?' என்று வினவி இல்லை என்ற விடையைப் படிக்கும் நம்மையே சொல்லச் செய்து விடுகிறார்.

**22. "ஞாயிற்றைக் கைமறைப்பார் இல்'" – இடம் சுட்டிப் பொருள் தருக.**

மூங்கிலைப் போன்று நன்கு செழிப்புற்று வளர்ந்த, திரண்ட தோள்களையும், கூரிய வேல்போன்ற கண்களையும் உடைய பெண்ணே பரந்த வானிலே ஒளிவீசிக் கொண்டிருக்கின்ற கதிரவனைக் கையால் மறைக்க இயலுமோ? அதுபோல மிகுந்த அறிவும், ஆற்றலும் கொண்டவர்களை தகாத சொற்களையும், செயல்களையும், பழி பாவங்களையும் அவர்மேல் சுமத்தி , அவர்களின் புகழைக் கெடுக்க இயலுமா?. **"ஞாயிற்றைக் கைமறைப்பார் இல்''** என்பது பழமொழி.

**23. நந்தி மன்னனின் கொடைப் பெருமையைக் கூறுக.**

புலவர்கள் நந்தி மன்னனை நாடி வருகின்றனர். அவன் புகழைப்பாடி பெரும் பரிசில்களைப் பெறுகின்றனர். பரிசிலைப் பெற்ற அப்புலவர்கள் பெரிய செல்வராகி மன்னராக மாறிவிட்டனர். எனவே இரவலர்கள் அங்கு இல்லை. இனி இந்த மண்ணுலகில் இரவலர்கள் உண்டென்றால் அவை குமுதமாகிய அல்லி மலர்களே ஆகும். ஏனெனில் அவை மட்டும் இரவில் அலர்கின்றன(மலர்கின்றன).

**பகுதி: இ - பெரு வினாக்கள்** (4X6=24)

***அனைத்து வினாக்களுக்கும், முன்னுரை மற்றும் முடிவுரை எழுதி விடையளிக்கவும்.***

**24. விரல் மீட்டிய மழை – கவிதையின் மையக்கருத்தை விவரி.**

**முன்னுரை :** கவிஞனுக்கு, சுற்றுப்புறத்தின் இயல்பான காட்சிகளும், கவிதைக்குரிய கருவாகிவிடுகின்றன. அவ்வகையில், அமைதியான இரவுப்பொழுதில் தொடங்கி, காலைப்பொழுதின் பரபரப்பு வரையிலான இயல்பான காட்சிகளைக் கவிஞர், சொல்லோவியமாக, **படிம உத்தியில்** படைத்துள்ளார்.இரவுப்பொழுதின் இருளும், அமைதியும், விடியலை நோக்கிச் சிறிது சிறிதாக நகர்கின்றன. இரவின் அமைதியான இயக்கங்களும், அதைத் தொடர்ந்த விடியலும், காலைப்பொழுதில் மனிதர்களின் பரபரப்பு இயக்கங்களும் கவிதையின் பாடுபொருளாக அமைந்துள்ளன.

**இரவில் இருள் சூழ்ந்த சுற்றுப்புறம் :** பறவை, முட்டைகளை அடைகாக்கும். அதுபோல, இரவுப்பொழுதும், ஒட்டுமொத்தச் சுற்றுப்புறத்தையும், இருள் என்னும் முட்டைக்குள் வைத்துப்பாதுகாக்கிறது.

**எங்கும் அமைதி :** இருள் சூழ்ந்த இரவில், சுற்றுப்புறம் எங்கிலும், அமைதி மட்டுமே நிறைந்திருந்தது.எங்கும், எவ்வித இயக்கமும் இல்லை. ஆதலில், அமைதி சிறிதும் தடைபடவே இல்லை. சூழலின் அமைதி கலையாத அழகினை எடுத்துரைப்பதற்காகக் கவிஞர், வானம் முகம் பார்க்கின்ற தெளிந்த குளத்தையும், அங்கு மென்மையாக வீசுகின்ற தென்றலையும் குறிப்பிட்டுள்ளார்.

**சுற்றுப்புறத்தில் அமைதியுடன் சிறு இயக்கம் :**சுற்றுப்புறத்தில், அனைத்து உயிர்களும் ஓய்வு கொண்டிருந்தன. மாடுகள் அமைதியாக அசைபோட்டு, இரவைக் கழித்தன. இத்தகைய சிறுஇயக்கமே சுற்றுப்புறத்தில் நிகழ்கிறது.

**மலர்கள் மலர்கின்ற நேரம் :** பொழுது மேலும் சென்ற நிலையில், மலர்கள் மலரத் தொடங்கின. வண்டுகள், அவற்றிலிருந்து தேன் உண்ண வட்டமிடுகின்றன.

**மாடுகள் பால் சுரக்கின்ற நேரம் :** மாடொன்று, தனது மடிநிறைந்த பாலினைக் கன்றுக்கு ஊட்ட இயலாமல் தவித்தது. கன்றும், தனது, தாய்ப்பசுவைச் சென்றடைவதற்கு மிகவும் முயல்கிறது.

**இரவின் அமைதி கலைகிறது :** காலை வானில் சூரிய உதயம் தென்படுகிறது.பொழுதுவிடிகிறது. சுற்றுப்புறமும் சோம்பல் நீங்கி விழிக்கிறது. வீட்டின் சுவர்க்கடிகாரங்கள், அனைவரையும் தட்டி எழுப்புகின்றன. மனிதர்களின் இயக்கம் முதலான பல இயக்கங்களால், சுற்றுப்புறத்தின் அமைதியானது, சிறிது சிறிதாகக் கலைகிறது.

**மனிதர்களின் நம்பிக்கை நாள் :**மனிதர்கள், ஒவ்வொரு நாளையும் தமக்குரிய வெற்றி நாளாகக் கொண்டாட ஆசை கொள்கின்றனர். விடிந்த அன்றைய நாளிலாவது, அவ்ஆசை நிறைவேற வேண்டும் என்கின்ற ஏக்கத்துடன் எதிர்பார்க்கின்றனர். அதனால் ஒவ்வொரு நாளும் நாள்காட்டியில், பழைய தேதியைக் கிழித்துவிட்டு, புதிய நாளினை நம்பிக்கையுடன் வரவேற்கின்றனர்.

**செய்தித்தாள்கள் வழியே உலகின் நலன் விசாரித்தல் :** உலகின் நன்மையும், தீமையும், செய்தித்தாள்கள் வழியே, நம்மை வந்தடைகின்றன. உலகின் நன்மையும், தீமையும் ஒருநொடிப்பொழுது, அன்றாடக் கடமைகளில் கவனம் செலுத்தத் தொடங்கிவிடுகிறோம்.

**பூமிப்பந்தின் பெருமூச்சு :** பகல்பொழுதின் தொடக்கமாகிய காலைப்பொழுதானது, மனிதர்களின் அசுர இயக்கத்தினால், மேலும், மேலும் பரபரப்படைகிறது.

அவ்வேளைகளில், சுமக்க இயலாத பெருஞ்சுமையினைச் சுமப்பதைப்போல, பூமி பெருமூச்சுவிடுகிறது.

இவ்வாறு, அசுர வேகத்தில், நாளெல்லாம் சுற்றுப்புரம் இயங்குவதும், இரவில், இனம் புரியாத அமைதியில் ஆழ்வதும் அன்றாட நிகழ்வுகளாக அமைவதை ஆசிரியர் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

## 25. கல்வியின் சிறப்பை நாலடியார் வழி எடுத்துரைக்க.

தலைமயிரைச் சீர்படுத்தி முடிப்பதால் வரும் அழகும், முந்தானையில் கரையிட்ட அழகும், மஞ்சள் பூசுவதால் உண்டாகும் அழகும் உண்மை அழகல்ல. மனத்தளவில் உண்மையாக நடந்துகொள்கிறோம் என்னும் நடுவு நிலையாம் ஒழுக்க வாழ்க்கையைத் தரும் கல்வி அழகே மிக உயர்ந்தஅழகாம்.

கல்வி இவ்வுலக இன்பத்தைத் தரும்; பிறர்க்குத் தருவதால் குறையாது; (கற்றவர்) புகழை எங்கும் பரவச் செய்யும்; (தாம்) உயிரோடு இருக்கும்வரை அழியாது. ஆதலால் எந்த உலகத்திலும் கல்வியைப் போல அறியாமையைப் போக்கும் மருந்தை யாம் கண்டதில்லை.

களர் நிலத்தில் உண்டான உப்பைச் சான்றோர், நல்ல நன்செய் நிலத்தில் விளைந்த நெல்லைவிட மேன்மையாகக் கருதுவர். அதுபோலக் கீழ்க்குடியிற் பிறந்தவர்களானாலும் கற்றறிந்தவராயின் அவர்களை மேலான குடியினும் உயர்ந்த இடத்தில் வைத்து மதித்தல் வேண்டும்.

வைத்த இடத்திலிருந்து (மனத்திலிருந்து) பிறரால் கவர்ந்து கொள்ள இயலாது; தமக்குக் கிடைத்துப் பிறருக்குக் கொடுத்தால் அழிவதில்லை; மேலான படை வலிமையயுடைய மன்னர் சினந்தாலும் கவர்ந்து கொள்ள முடியாது. ஆதலால், ஒருவன் தன் மக்கட்குப் 'செல்வம்' எனச் சேர்த்து வைக்கத்தக்கது கல்வியே; பிற அல்ல!

கல்விகள் முடிவில்லாதன; ஆனால் கற்பவருடைய வாழ்நாட்கள் சில! சற்றுப் பொறுமையாக நினைத்துப் பார்த்தால் அந்தச் சில வாழ்நாட்களிலும் பிணிகள் பலவாக இருக்கின்றன. ஆதலால் நீரை நீக்கிப் பாலைப் பருகும் அன்னப் பறவையைப் போல அறிவுடையார், நூலின் தன்மைகளை அறிந்து நல்ல நூல்களையே கற்பர்.

## 26. ஏட்டில் இல்லாத இலக்கியம் என்ற கட்டுரைச் செய்திகளை விவரி.

ஔவை துரைசாமி (செப்டம்பர் 5, 1903 ஏப்ரல் 3, 1981) தமிழறிஞர். தமிழ்மொழி மே ருந்த பற்றுத ன் காரணமாகத் தான் பார்த்து வந்த உடல்நலத் தூய்மைக் கண்காணிப்பாளர் பணியில் இருந்து விலகி; அதன்பின் தமிழ் கற்றுத் தமிழறிஞராக உயர்ந்த பெருமைக்குரியவர். விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்திற்கு அருகில் உள்ள ஔவையார் குப்பம் என்னும் சிற்றூரில் சுந்தரம்

பிள்ளை சந்திரமதி தம்பதிக்கு மகனாக 1903 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் நாள் பிறந்தார். கரந்தைத் தமிழ்ச்சங்கப் பள்ளியில் தமிழ்வேள் உமாமகேசுவரனால் ஆசிரியராகப் பணியமர்த்தப்பட்டார். தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ் முத ய இதழ்களில் தமிழ் இலக்கிய, இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதினார். 1942 இல் திருப்பதி திருவேங்கடவன் கீழ்த்திசைக் கல்லூரியில் ஆராய்ச்சியாளராகப் பணியில் சேர்ந்தார். 1943 முதல் எட்டு ஆண்டுகளுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறையில், விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1951இல் மதுரை தியாகராசர் கல்லூரியில் பேராசிரியராகச் சேர்ந்தார். மணிமேகலைக் காப்பியத்திற்குப் புத்துரை எழுதும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் திடீரென்று இயற்கை எய்தி விட்டதை அடுத்து, ==கரந்தை கவியரசு++ வேங்கடாசலம் பிள்ளையின் விருப்பத்திற்கிணங்க, மணிமேகலைக் காப்பியத்தின் இறுதி நான்கு காதைகளுக்கும் விளக்கவுரை எழுதிக் கொடுத்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் போது, சைவ சமய இலக்கிய வரலாறு, ஞானாமிர்தம் போன்ற அரிய நூல்களை எழுதினார். அந்நூல்கள் பல்கலைக் கழகத்தின் வெளியீடுகளாக வெளியிடப்பட்டன.

## 27. சமூக சேவைக்கான தேசிய விருது பெற்றுள்ள நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் வரைக.

**நண்பனுக்குப்பாராட்டுக்கடிதம்**

07-09-2019,

கோயம்புத்தூர்.

அன்பிற்கினியநண்பனுக்கு,

நலம். நலமறியஆவல். உனக்கும் உனது குடும்பத்தாருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள். நான் உனக்குக் கடந்தமுறை எழுதிய கடிதமும் வாழ்த்துக் கடிதமாக இருந்தது. இந்தக்கடிதமும் வாழ்த்துக் கடிதமாகவே அமைந்து விட்டமையால், எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.சென்றவாரம், புதுதில்லியில் குடியரசுத்தலைவர் திரு.பிரணாப்முகர்ஜியைச் சந்தித்து, 'சிறந்தஇளம்சமூகத்தொண்டர்' என்ற விருதினைப் பெற்றுவந்த அனுபவம் குறித்து எழுதியிருந்தாய். அத்துடன், நீவிருது பெற்றதைப் பாராட்டி, கற்பகம் உயர்கல்விக் கலைக் கழகத்தில் சிறந்ததொரு பாராட்டுவிழாவும் நடைபெற்றதையும் குறிப்பிட்டு, நீஅனுப்பியிருந்த கடிதமும் கிடைத்தது. நாட்டுக்கு உழைக்கின்ற நல்லகுடிமகனாக உன்னைப்பெற்றெடுத்த உனதுபெற்றோரின் திருவடிதொட்டு வணங்கி மகிழ்கின்றேன். உனது சாதனைக்காக அவர்கள், மகிழ்கின்ற வேளையில், எனது முதுநிலைப்பட்ட(PG:MBA) வாய்ப்புக்காக, இன்னும் இரண்டு மாதங்களில் ஃப்ளோரிடா செல்ல இருப்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்து. அவர்களது ஆசிகளும், ஊக்குவிப்புமே இத்தகைய அரியவாய்ப்பைப் பெற்றுத்தந்தது என்பது உண்மை. அவர்களுக்கு எனது வணக்கம். தாய்நாட்டிலேயே பயின்று, உலகச்சாதனைபுரிந்து, தாய்நாட்டுக்கே தொண்டுபுரிய வேண்டும் என்ற உனது கனவு வெகுவிரைவில் நிறைவேறவாழ்த்துக்கள். அதற்காகவே, இந்திய மேலாண்மையியல் கல்வி நிறுவனத்தில்(IIM) முதுநிலைப்பட்டம் மேற்கொள்வதற்கான பொதுநுழைவுத் தேர்வைஎழுதி, தேசியஅளவில் முதலிடமும் பெற்றுவிட்டாய். இவ்வெற்றிக்கான கடினஉழைப்புடன், பல்கலைக்

கழகத்தேர்வையும் எழுதி, சிறப்புப்புள்ளிகளுடன் வெற்றி பெற்றுள்ளாய். பல்கலைக்கழகத் தேர்வில் இதுவரையிலும் இல்லாதசாதனையையும் புரிந்துள்ளாய். இதுஉனது பேராசிரியர்களுக்கும், பல்கலைக்கழகத்துக்கும், நமது நண்பர்களுக்கும் பெருமை சேர்க்கக்கூடிய தாகும். இதுகுறித்த செய்தியினைத் தினமணிநாளிதழில் கண்டுமகிழ்ந்தேன். உனது உடன்பயில்கின்ற மாற்றுத்திறனாளி நண்பரையும் ஊக்குவித்து, அவரையும் தேர்வில்முதலிடம் பெறச்செய்த, உனது தன்னலமில்லாத தொண்டினைத்தலை தாழ்த்தி வணங்கி, வாழ்த்தி மகிழ்கின்றேன். நமது வெற்றிப்பயணம் மேலும் தொடரும்.நல்ல பண்புகளால் செழித்துள்ள நமதுநட்பால் நாட்டுக்குப் பெருமைசேர்ப்போம்.

நன்றி.

இப்படிக்கு,
இனியநண்பன்,
அறிவழகன்.
கையொப்பம் (தமிழில்).

உறைமேல்முகவரி,

திருஅன்பு.அறிவொளிஅவர்கள்,
எண் : 20, விவேகானந்தர்நற்பணிமன்றம்,
தொல்காப்பியர்நகர், தஞ்சாவூர்-12.

**கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்** 19LAU101

**கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்** *(For Arts Students)*

**தமிழ்த்துறை**

**முதலாம் *பருவம்: மூன்றாம் இடைத்தேர்வு*** *நாள்:*

***நேரம்: 2 மணி*** ***மொத்த மதிப்பெண்கள்:50***

***பகுதி: அ: ஒரு மதிப்பெண் வினாக்கள்*** ***(20X1=20)***

## பகுதி: அ

**சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (20X1=20)**

1. கண்ணதாசனின் இயற்பெயர் என்ன?

அ). சூடாமணி ஆ) சந்திரன் இ). கவிமணி ஈ). **முத்தையா**

2. பாடப்பகுதியில் சுட்டப்பெறும் பிள்ளைத்தமிழின் ஆசிரியர் யார்?

(அ). என்னயினாப்புலவர் ஆ) **குமரகுருபரர்** இ). பெயர் தெரியவில்லை ஈ). கவிமணி

3. தண்டபாணி சுவாமிகளின் இயற்பெயர் என்ன?

அ). அண்ணா ஆ) கனக சுப்புரத்தினம் இ). பிரபஞ்சன் ஈ). **சங்கரலிங்கம்**

4. முத்தமிழ் காவலர் என்று யாரைக் குறிப்பிடுகிறோம்?

அ). அண்ணா ஆ**) விசுவநாதம்** இ). பிரபஞ்சன் ஈ). சங்கரலிங்கம்

5. நாவலந்தீவு என அழைக்கப்படுவது எது?

அ). **இந்தியா** ஆ). சீனா இ). திபத் ஈ). பாக்கிஸ்தான்

6. பால்வீதி என்ற கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் யார்?

அ). மேத்தா (ஆ). பாரதியார் (இ). கவிமணி (ஈ). **அப்துல்ரகுமான்**

7. மானுடர் கரங்களில் அகப்பட்ட மண்ணின் கைதிகள்_______.

(அ) **மரங்கள்** ஆ) மாடுகள் இ) ஆறுகள் ஈ) மலைகள்

8. நீதிநெறி விளக்கம் என்னும் நூலின் ஆசிரியர் யார்?

அ) சிவப்பிரகாசர் ஆ) **குமரகுருபரர்** இ) வேதநாயகர் ஈ) ஔவையார்

9. 'உனக்குச் சரியாருமுண்டோ?' - என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

அ) **தமிழ்விடுதூது** ஆ) நந்திக்கலம்பகம் இ) முக்கூடற்பள்ளு ஈ) தமிழலங்காரம்

10. 'தமிழ்மதுரைக்கரசே! தாலோ! தாலேலோ!' என்று தாலாட்டுப் பாடியவர் ________.

அ) சிவப்பிரகாசர் ஆ) **குமரகுருபரர்** இ) வேதநாயகர் ஈ) ஔவையார்

11. பலா தழைக்கத் தமிழ் பாடியவர் யார்?

அ) சிவப்பிரகாசர் ஆ) குமரகுருபரர் இ) வேதநாயகர் ஈ) **ஔவையார்**

12. 'தனிப்பாடல்கள்' - கட்டுரையின் ஆசிரியர் யார்?

அ) கி.ஆ.பெ. விசுவநாதன் ஆ**) வ.சுப.மாணிக்கனார்** இ) மு.வரதராசனார் ஈ) ரங்கராஜன்

13. விடுதலையைக் கூவியழைக்கின்ற புதுமைக்குயில் யாருடையது?

அ) புதுக்கவிஞன் ஆ) **புரட்சிக்கவிஞன்** இ) புதுமைப்பெண் ஈ) புதுவிடியல்

14. குமரகுருபரரின் கனவில் குமர வடிவில் தோன்றியவர் யார்?

அ) சிவபெருமான் ஆ) திருமால் இ) **முருகன்** ஈ) பிரம்மன்

15. போலிப்புலவர்களின் செவியை அறுப்பவர் யார்?

அ) பிள்ளைப்பாண்டியன் ஆ) **வில்லிப்புத்தூரார்** இ) ஒட்டக்கூத்தர் ஈ) நக்கீரர்

16. பெருந்தமிழ்க் காவலர் என்று போற்றப்படுபவர் யார்?

அ) சிவப்பிரகாசர் ஆ) **வ.சுப.மாணிக்கம்** இ) ரா.பி.சேதுப்பிள்ளை ஈ) வெள்ளைவாரணர்

17. யானையைப் போல் உடம்பைப் பெருத்துக் காட்டும் அட்டமாசித்து எது?

அ) அரிமா ஆ) **கரிமா** இ) மகிமா ஈ) இலகிமா

18. வானத்தில் விளக்கெரிவது யாருக்காக?

அ). மனிதனுக்கு ஆ). விலங்குக்கு இ). இரவுக்கு ஈ). **மரங்களுக்கு**

19. நல்ல பெண்மணி என்ற மகளிருக்கான இதழை நடத்தியவர் யார்?

அ). பாரதிதாசன் ஆ). **நர்மதா** இ). தாமரை ஈ). அப்துல்ரகுமான்

20. தமிழலங்காரம் என்னும் நூலை எழுதியவர் யார்?

அ). வேதநாயகம்பிள்ளை ஆ). பாரதியார் இ). **தண்டபாணி சுவாமிகள்** ஈ). குமரகுருபரர்

## *பகுதி – ஆ*

***அனைத்து வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளி:*** ***(3X2=6)***

21. 'ஞாலமறியாதவர்க்கு நாளேது, பொழுதேது' - இடம்சுட்டிப் பொருளுரைக்க.

கவிஞர் கண்ணதாசன் – சுயதரிசனம் -வெயில் கொளுத்தகின்ற கோடைக்காலத்தில் ஓடையில் நீர் தேடி அலைகின்ற மானினங்களேஈ வானத்தில் வராத நேரத்தில் அறிவின்மையுடன் நடனமாடும் மயிலினங்களே, உலக நிலைக்கு மாறாக ஆனிமாதத்தில் விதைவிதைத்த அவசர அவசரமாக நீர் பாய்ச்சி ஆடிமாதத்தில் அறுவடை செய்ய முயற்சிப்பவர்களே, தேனில்லாத காகிதப்பூவில் அமர்ந்து தேனெடுத்துவிட்டது போல திரும்பி வரும் வண்டுகளே....காலத்தை உணராதவர்களுக்கு காயும் இல்லை, கனியும் இல்லை. அதுபோல உலக உண்மையை அறியாதவர்களுக்கு நாளும் இல்லை பொழுதும் இல்லையென்கிறார் ஆசிரியர்.

22. குமரகுருபரர் – குறிப்பு வரைக.

23. தமிழர்கள் காற்றின் தன்மைகளை எவ்வாறு ஆய்ந்துரைத்துள்ளனர்?

## *பகுதி – இ*

***பெருவினாக்கள்: அனைத்து வினாக்களுக்கும் விடையளி:*** ***(4X6=24)***

24. தமிழர்கலைகளையும் அவற்றின் சிறப்புகளையும் எழுதுக.

25. மரங்கள் மண்ணின் வரங்கள் என்பதை கவிஞர் எங்ஙனம் வலியுறுத்துகிறார்?

***முகமது மேத்தா செப்டம்பர் 5, 1954 பெரியகுளத்தில் பிறந்தார். இவர் மதுரையில் பயின்று சென்னையில் வாழ்பவர். கல்லூரிப் பேராசிரியர், வானம்பாடிக் கவிஞர். சமுதாயம் எப்படியெல்லாம் ந ந்து, மெ ந்து இதயத்தில் வ யை ஏற்படுத்திக் கொண்டுள்ளது என்பதை இவர் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. கண்ணீர்ப்பூக்கள், நந்தவன நாட்கள், ஒரு வானம் இரு சிறகு போன்ற பல கவிதை நூல்களைப் படைத்துள்ளார். மரங்கள் மண்ணின் வரங்கள் என்ற கருத்திற்கு வலுசேர்க்கும் விதமாக மரம் என்ற கவிதை அமைந்துள்ளது.***

சிறகுகளைத் துடுப்புகளாகப் பயன்படுத்தி படகுகள் போல விரைந்து செல்லும் பறவைகளுக்கு நாங்கள் தங்கும் விடுதிகளாக அமைந்துள்ளோம். நாங்கள் வேறுபாடு கருதாமல் எல்லாப் பறவைகளுக்கும் இடம்கொடுக்கும் பொதுவுடமைவாதிகள். அதனால்தான் என்னவோ தரமற்ற இப்பறவைகள் எங்கள் தலையை அசுத்தப்படுத்துகின்றன. நாங்கள் மனிதர்களை வெயிலில் இருந்து காக்கும் வெண்கொற்றக் குடைகளாக உள்ளோம். மனிதர்கள் வாங்கி வைக்காத விசிறிகளாகவும் உள்ளோம். அப்படிப்பட்ட நாங்கள் மனதர்களின் கைகளில் அகப்பட்டுக் கொண்ட மண்ணின் கைதிகாள உள்ளோம். அதனால்தான் சிறையில் அடைபடாமல் வெளியே இருந்தாலும் எங்கள் தோளிலும், மார்பிலும் எண்களை எழுதி மாட்டி வைக்கிறார்கள். காற்றின் வேகத்தைக் கண்டறியும் திறமை எங்களுக்கு உண்டு. காற்றின் வேகம் கூடும் போது அது எங்கள் தலைமீது நடந்து செல்கிறது.எங்களை வெட்டிப்போட்டால் உங்களுக்கு விறகாவோம், வெயிலில் காயப் போட்டாலும் சுறுசுறுப்பாக எரிவோம். எங்களைக் கல்லால் எறிந்தாலும், கம்பால் அடித்துத் துன்புறுத்தினாலும் மாறாக பரிசுமட்டுமே கொடுக்கும் பண்பு எங்களுடையது.

இரவு வேளைகளில்தவறிவிழும் எரிகற்களைத் தாங்கிப்பிடிக்கும் வலைகளாச் செயல்படுவோம். மனிதர்கள் தூங்கிய பிறகும் வானத்தில் விளக்கெறிவது எங்களுக்காகவே என மரங்களின் அகமன உணர்வை உணர்த்துவதாக கவிதை அமைத்துள்ளார் ஆசிரியர்.

## 26. தமிழின் பெருமைகளாகத் தமிழலங்காரம் நூல் குறிப்பிடுவனவற்றைத் தொகுத்துரைக்க.

**திருநாவுக்கரசருக்கு அருளிய செயல்தமிழ்**

சமணர்கள் திருநாவுக்கரசரைக் கருங்கல்லில் பிணித்துக் கடலிற் செலுத்தினர். அப்போது, அதையே தெப்பமாகக் கொண்டு கரையேரினார். கொலை செய்ய தன்மீது ஏவிவிட்ட யானையைத் தன்னை வலம் வந்து வணங்குமாறு செய்தார். சுண்ணாம்புச் சூளையில் இடப்பட்டு, ஏழு நாட்கள் இருந்து, எவ்வித ஊறும் இன்றி வெளியே வந்தார். பாம்பு தீண்டி இறந்த அப்பூதியடிகளின் மகனை உயிர்த்தெழச் செய்தார். இவை யாவும் நிகழ்ந்தது திருநாவுக்கரசரது தமிழ்ப் பாடலேயென்பதாம்.

**தீமையை நலமாகச் சேர்த்தது தமிழே**

திருமங்கையாழ்வார் என்பவர் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். அவர் செய்த செயல் களவும், வழிப்பறியுமேவாகும். அவ்வாறு தாம் சேகரித்த பொருட்களை எல்லாம் பாகவதர்களுக்கே செலவிட்டார். திருமாலைப் பலவிதமான தமிழ்ப் பாசுரங்களால் பாடி துதிசெய்து வந்தார். அவர் செய்த களவு மற்றும் வழிப்பறி பாதகச் செயல்கள் அனைத்தும் தவப்பயன்களாக மாறின. திருமங்கையாழ்வார் திருமாலின்

திருவருளை தேவர்களும் வியக்கும்படி பெற்றார். அதற்குக் காரணம் திருமாலை தமிழ்ப் பாசுரங்களால் பாடியதேயாகும்.

**பலா தழைக்கத் தமிழ் பாடினள் ஔவை** தமையன் தம்பியான வேடர் இருவருக்கும் பொதுவான பலாமரத்தை, அண்ணன் பகையால் வெட்டினான். பலா மரத்தின் பலனை இருவரும் இழந்தனர். ஔவையின் அருள் வாக்கால் நிலனும் வானும் அறியும் வண்ணம் பழையபடி பலா தழைத்துப் பழுத்தது. அத்தகைய அருள் விண்ணைத்தொடுமளவு உயர்ந்த பொதியை மலையில் பிறந்து வளர்ந்த தமிழுக்கே உரியது.

**பத்திரகிரியார் பாடலும் தமிழே**

பத்திரகிரியார் என்பவர் எக்காலக் கண்ணி என்ற தமிழ்ப் பாடல் பாடினார். அதன் பயனாக சற்குரு நாதரான பட்டினத்தாரால் ஆளப்பெற்று, எமவாதை நீங்கி, தன் நாயும் மறுபிறவியில் பெண்ணாகப் பெற்று, முத்தியுற்றார். இந்த அற்புதமான நிகழ்வை இன்றும் உலகில் பேசுவர்.

**அபிராமிபட்டர்க்கு ஆருயிர் தரும்தமிழ்**

திருக்கடையூரில் அம்பிகையை வழிபடும் சாக்த நெறியில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர் அபிராமிபட்டர். தை அமாவாசையன்று அம்பிகையின் அருள்மிகு தோற்றத்தை ஆனந்தமாய்க் கண்டு பரவசமுற்றிருந்த நிலையில் இருந்த அபிராமிபட்டர் வாய் குழறி அரசரிடம் இன்று பௌர்ணமி என்று கூறினார். தியானம் கலைந்தெழுந்ததும் நிகழ்ந்ததை உணர்ந்து வருந்தினார். அம்பிகையை வேண்டி அபிராமி அந்தாதி பாடினார். அம்பிகை தனது தோடு ஒன்றை வானவீதியில் தவழ விட்டாள், அ.்.து ஒளியைப் பொழிந்து பௌர்ணமியைப் போல் பிரகாசித்து ஜொலித்தது.

**அராவிடம் கம்பர் அகலச் சொலல்தமிழ்**

சிதம்பரத்தில், இராமாயண நூலைக் கேட்டுச் சிறப்பிக்கும்படி சொன்ன கம்பரிடம், மூவாயிரம் அந்தணர்கள் ஒன்றுகூடி விடத்தால் இறந்த ஒருவனை உயிர்ப்பிக்க வேண்டினர். கலைமகள் அருளால் கம்பர், பாட்டைப் பாடிய போது விடம் நீங்கியது. இறந்தவன் உயிர் பெற்று எழுந்தான். அச்சிறப்பைத் தமிழ் உதவியது என்பதாம்.

**தந்தி முகன்பணம் தரச்செயும் தமிழே**

இரட்டைப் புலவர்கள், குளத்தில் நீராடப்போன சமயம், கையிலிருந்த ஒரு பணத்தை, கரையிலிருந்த மனிதர், முனிவர், தேவர்களுக்கும் முழுமுதலாகத் திகழும், யாவரும் போற்றித் துதிக்கும் ஆனைமுகத்தானாகிய விநாயகரிடம் வைத்துச் சென்றனர். அவர்கள் நீராடிவிட்டுத் திரும்பி வந்து பார்த்தபோது பணம் காணவில்லை. விநாயகர்தான் தமது பணத்தைத் திருடியிருப்பார் என்றெண்ணி “தம்பியோ பெண் திருடி” என்ற தமிழ்ப்பாட்டுப் பாடினர். விநாயகர் முன்னைய பணத்துடன் ஒரு பணம் சேர்த்துக் கொடுத்தார் அருள்புரிந்தார்.

**மன்னவன் மிசைமண் மாரிபெய் திடல்தமிழ்**

விண்ணிலிருந்து பொழியும் மழைக்கு ஒப்ப, வாரி வழங்கும் வள்ளலைப் போன்ற வேடமிட்ட திருமலைராயன் என்னும் மன்னன், புலவர்க்குப் பரிசில் வழங்காது கண்ணீர் மல்கச் செய்து பலரைச் சிறை வைத்தவன். அவனிடம் காளமேகப்புலவர் யமகண்டமென்ற நூல் பாட ஒப்பி, புலவரைச் சிறை நீக்கி

நூலைப் பாடினார். திருமலைராயன் காளமேகப்புலவரை மதிக்காது அலட்சியம் செய்தான். இறுதியில் அவனை மண்மாரி பெய்து மாயும்படியும் செய்தது தமிழ்ப் பாட்டுப் பாடியே என்பதாம்.

**அகத்தியர் செந்தமிழ் அறிந்தவர் தேவரே**

பரமசிவனைப் போல, முனிவர்களுக்கு எல்லாம் அரசராக விளங்கும் பொதியை அகத்திய முனிவர், முத்துப் போன்ற வெண்ணிறக் கலைமகள் அருள் கொண்டு உண்டாக்கிய தமிழ் மொழியானது, இவ்வுலகத்தில் எப்படிப் பட்டவரையும் தேவர்களுக்கும் தேவராகச் செய்யவல்லது என்பதாம்.

**வெண்காடர் சிவமா மேவச் செய்யும் தமிழ்**

திருவெண்காடு என்னும் ஊரில் பெருஞ்செல்வச் செழிப்போடு வாழ்ந்து வந்த பட்டினத்தார் செல்வ நிலையாமையை உணர்ந்து துறவு பூண்டார். இவர் பல இடங்களில் பிச்சை எடுத்து உண்டு வாழ்ந்து வந்தார். இவரது இந்தச் செயல் தமக்கு அவமானம் தருவதாக அவரது தமக்கை கருதினார். அவரைக் கொல்ல நஞ்சு கலந்த அப்பத்தை உண்ணத் தந்தார். இறைவன் திருவருளால் உண்மையுணர்ந்து அந்த அப்பத்தைத் தந்த அவரது தமக்கையின் வீட்டின்மீது எறிந்தார். வீடு தீப்பற்றி எரிந்து சாம்பலானது. கழுமரத்தையும் எரியும்படிப் பாடினார். திருவொற்றியூர் கடலருகில் வந்து தன்னை மணலில் புதைக்கும்படி செய்து இலிங்க உருவில் எழுந்தார்.

## 27. 'புதுமைக்குயில்' கவிதை முன்வைக்கும் பெண்ணியச் சிந்தனைகளை ஆராய்க.

***தெளிவான சிந்தனையோடு, எளிய நடையில், இனிமையான சொற்களில் புதுக்கவிதைகளை எழுதி வருபவர். ஊமை ராகங்கள், மண்ணின் காயங்கள், வாழ்த்து மலர்கள், காற்றில் கரைந்தவை போன்றன இவருடைய கவிதைப் படைப்புகள்.***

பாரதிதாசனின் புதுமைப் பெண்ணாக எண்ணி என்னை ஏற்கத்தயார் என்றால் நான் உங்களுடன் வருகிறேன்.பழமையைவிட்டுவிட்டு புதுமையை ஏற்கத் தயார் என்றால் நான் வருகிறேன். இருவரும் இணைந்து இல்லறம் நடத்த நீங்கள் உறுதுணையாக உண்மையாக இருப்பீர்களென்றால் என் தாய் தந்தையரை விடுத்து உங்களுடன் வரத் தயார். மேடையில் ஒன்று வீட்டில் ஒன்று என இல்லாமல் நடைமுறை வாழ்க்கையை நலமுற நடத்த தயார் எனில் நான் உங்களுடன் வருகிறேன். இல்லற வாழ்வில் நான் என்ற எண்ணம் தவிர்த்து நாம் என்ற எண்ணத்துடன் வாழ்க்கை நடத்த தயார் என்றால் உங்களுடன் வரத்தயார். இல்லறச் சிறையில் என்னை அடைத்து வைக்க நினைத்தால் நான் ஒன்றும் மூலையில் முட்டையிடும் கோழி அல்ல எதிர்த்து விடுதலைக் குரல் கொடுக்கும் புரட்சிக்கவிஞனின் புதுமைக் குயில் நான்.